விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 01 வியாழக்கிழமை (13.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 056

## ஜெனிவா பிரேரணை நிச்சயம் நிறைவேறும்

### பிரித்தானியா நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை நிறைவேற்றப்படும் என்று பிரித்தானியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை அமெரிக்காவும் பிரிததானியாவும் இணைந்து சமர்ப்பிக்கவுள்ளன.

தமிழர்களுக்கான அனைதது்கட்சி நாடாளுமன்ற குழுவின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் லீ ஸ்கொட் மற்றும் சியோப்ஹெய்ன் ஆகியோர், பிரித்தானிய நாடாளுமன்ற கட்டிடத்தில் அந்த நாட்டின் வெளியுறவு மற்றும பொதுநலவாய நாடுகளின் சிரேஷ்ட பிரதிநிதி


20 ஆம் பக்கம் பார்க்க..

## போக்குவரத்து பொலிஸார் துரத்தியதில் தப்பித்து ஓடிய குடும்பஸ்தர் உயிரிழப்பு

### ஆட்டோ, மின்கம்பத்துடன் மோதியது மோ.சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

குற்ற எச்சரிக்கை ஒலியை ஏற்படுத்தியபடி பின் தொடர்ந்து வந்த போக்குவரத்துப் பொலிஸாரிடம் இருந்து மோட்டார் சைக்கிளில் தப்பிக்க முறபட்ட குடும்பஸ்தர் ஒருவர் ஆட்டோவுடன் விபத்துக்குள்ளாகி பின் வீதியோர மின்கம்பததில் மோதுண்டதில் தலை சிதறி உயிரிழந்துள்ளார்.





இச்சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ்.ஆனைப்பந்தி சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் மத்தியை சேர்ந்த வசந்தராஜன் சுதாகரன் (வயது 36) என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிரிழநதவராவார் இது தொடர்

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஜெனிவா நீதியை தமிழர்கள் எதிர்பார்ப்பு



## நோர்வே தூதுவரிடம் யாழ்.ஆயர் எடுத்துரைப்பு


(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள நிலையில் இந்தக் கூட்டத் தொடரையே தமிழ் மக்கள் அதிகம் எதிர்பார்த்துள்ளதாகவும் இதிலிருந்தே தமிழ் மக்களுக்கு நீதி நியாயம் கிடைக்குமென நம்புவதாகவும் யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இலங்கைக்கான நோர்வே தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவர் கிரேட் லோச்ஷன் மாலை 4.30 மணியளவில் யாழ் ஆயர் இல்லத்திற்குச் சென்று ஆயர் தோமஸ்

20 ஆம் பக்கம் பார்க்க..

## 13 ஐ திணிக்க வில்லை



விரிவான செய்தி 19ஆம் பக்கம்

## ஜனாதிபதி மகிந்த விரைவில் பிரிட்டனுக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் மார்ச் மாதம் பிரிட்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிரிட்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள்தின கொண்டாட்டங்களில பங்கேற்பதற்காகவே மார்ச் 10-ம் திகதி ஜனாதிபதி பிரிட்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு உறுப்பு நாடுகளின அரசதலைவர்கள் மற

20 ஆம் பக்கம் பார்க்க..

## அரசு தரும் பணத்தை விட எமது நிலம் பெறுமதியானது

### காணி அமைச்சருக்கு அனந்தி பதிலடி

(கொழும்பு)

எமது மக்களின் நிலம் அரசாங்கத்தின் பணத்தை விடவும் பெறுமதியானது. வடக்கு மக்கள் தமது நிலங்களை நம்பியே வாழ்கின்றனர் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சுயநலப் போக்கினை நிறுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் நிலங்களை அவரகளிடமே ஒப்படைத்து தமிழர்களையும் பாதுகாக்க முன்வர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



அரசாங்கத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள வடக்கு மக்களின் நிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்த கருத்திற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தமது நிலங்களை நம்பியே பிழைப்பு நடத்தி வருகின்றனர். பல ஆண்டுகளாக அவர்கள் வாழ்ந்து வந்த நிலங்களை அரசாங்கம்

20 ஆம் பக்கம் பார்க்க..

### ஊடக சுதந்திரம்

## இலங்கைக்கு 165-ம் இடம்


(கொழும்பு)

உலக ஊடக சுதந்திர வரிசைப் பட்டியலில் இலங்கை 165-ம் இடத்தை வகிக்கின்றது. 180 நாடுகளைக் கொண்ட பட்டியலில் இலங்கை 165-ம் இடத்தை வகிப்பதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு அறிவித்துள்ளது. அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டறிக்கையில் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனநாயக நாடுகளாக அடையாளப்படுத்திக் கொள்ளும் பல நாடுகளில் ஊடக சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் அதிகளவு ஊடக சுதந்திரம் காணப்படும் நாடாக பின்லாந்து அறிவிக்கப்பட்டுள்ளது. ஊடக சுதந்திரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக எரித்திரியா கருதப்படுகின்றது. (செ-11)

## சட்டத்திற்கு புறம்பாக நான் கூறவில்லை

(யாழ்ப்பாணம்)



இலங்கையின் சட்டத்திற்கு புறம்பாக, முரணாக எனது உரை அமைந்திருந்தால் என் மீது நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு நான் தயாராகவே

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வு எதிர்வரும் 16-ம் திகதி 10 மணி முதல் ஒரு மணி வரை இலக்கம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்தான நிகழ்வில் கழக உறுப்பினர்கள், ஆர்வலர்கள் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னதமான பணிக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## திருமஞ்ச திருவிழா

சங்கானை விகர ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் 10-ம் நாளான நாளை வெள்ளிக்கிழமை திருமஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் பூசைகள் ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணியுடன் நிறைவடையவுள்ளது. தொடர்ந்து மாலை 6.30க்கு வசந்த மண்டப பூசையை அடுத்து சுவாமி திருமஞ்சத்தில் வீதியுலா வரவுள்ளதாக திருவிழா உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-17)

## அபிவிருத்திசங்க பொதுக்கூட்டம்

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இப்பொதுக்கூட்டத்தில் அனைத்து பெற்றோர்களையும் தவறாது கலந்து கொண்டு கல்லூரி வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு கல்லூரி அதிபர் திருமதி எம்.விமலநாதன் கேட்டுள்ளார். (அ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

மல்லாகம் றோ.க.வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் கல்லூரி பிரதி அதிபர் பா.அருள்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் ஜெ.எக்ஸ். பேணாட் றொக்னோ கலந்து கொள்ளவுள்ளார் (செ-11)

## இலங்கைக்கு சீனா ஆதரவு

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாக சீனா அறிவித்துள்ளது. நேற்று முன்தினம் பீஜிங்கில் வெளிவிவகார அமைச்சர் ஜிஎல்பீரிஸை சந்தித்துப் பேசிய, சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இதனைத் தெரிவித்துள்ளார்.

"மனித உரிமை விவகாரங்களை வைத்து இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில், சில நாடுகள் தலையீடு செய்வதை சீனா எதிர்ப்பதாக, வெளிவிவகார அமைச்சரிடம், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சுதந்திரம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு சீனா பக்க பலமாக இருக்கும் என்றும் சீன வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

தமது சொந்த விவகாரங்களைக் கையாளும் அறிவும், ஆற்றலும் இலங்கை மக்களுக்கு உள்ளது என்று சீனா நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# வீட்டிற்கு தீ வைப்பு



(மானிப்பாய்)

உடுவில் தெற்கு புதுமடம் ஜே/182 கிராமசேவகர் எல்லைப் பகுதியில் வீடொன்று தீ மூட்டி எரியூட்டப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, குறித்த வீட்டின் பெண் கிராம சேவகர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணி புரிகின்றார். அவர் வேலைக்காக கிராமசேவகர் அலுவலகத்திற்கு சென்றுள்ளதையும், கணவன் வேலைக்கு சென்றுள்ள நிலையிலும், அருகிலுள்ள சகோதரியின் வீட்டிலும் யாருமில்லாத சந்தர்ப்பத்தை சாதகமாக்கி தீ வைக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணி புரியும் குறித்த பெண்ணின் மீதான தனிப்பட்ட பகையின் காரணமாகவே தீ வைககப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

தீயூட்டல் காரணமாக வீடு முற்றாக சேதமடைந்ததுடன், வீட்டிலிருந்த உடைகள், உறுதி உட்பட்ட பெறுமதியான ஆவணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளது. அத்துடன் வீட்டினுள் பாதுகாப்பாக இருந்த நகைகளில்சிலவும்காணாமல போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, சந்தேகத்தின் பேரில் சிலர் தேடப்பட்டு வருவதாக பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (செ-9-23)

# வாகன விபத்து; இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டர் சைக்கிளில் சென்ற இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் புத்தூர் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மீசாலை பனையடிக் குளத்தினைச் சேர்ந்த கிசோர் (வயது21) மற்றும் அல்வாயை சேர்ந்த ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-29)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலைவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறுகின்ற இவ் மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சற்குணராசாவும் கௌரவ விருந்திறாக அச்சுவேலி யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலய அதிபர் மு. இராஜவரோதயமும் கலந்து கொள்ளவுள்ளார். (அ-4)

✦✦✦✦✦✦✦

யாழ். இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் பி.ப 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பிரதி அதிபர் ம.உதயகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பணிப்பாளர் சு.தேவமனோகரன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் க.பகீரதன், கௌரவ விருந்தினராக யா/இணுவில் இந்துக் கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-4)

✦✦✦✦✦✦✦

புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.கலைநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) நா.லோகநாதன், சிறப்பு விருந்தினராக புங்குடுதீவு தபாலதிபர் ந.கமலதாசன், இறுப்பிட்டி உபதபாலதிபர் எஸ்.கே.சதீபன், வேலணை பிரதேசசபை உறுப்பினர் கை.சிறிகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

✦✦✦✦✦✦✦

வவுனியா தாலிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மா.அரிபூரணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, ம.தியாகராசா, செனவிரட்ண தர்மபாலா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி. நடராஜ், வவுனியா தெற்கு கல்வி வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு.சுபாஸ்கரன், பூவரசங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.ராஜகுரு ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-266)

✦✦✦✦✦✦✦

யா/இராமநாதன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் பி.ப 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் கமலராணி கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ் மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விச் சேவை ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதோடு பரிசில்களினை யா/சென்ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் திருமதி [illegible] வழங்கவுள்ளார். (அ-4)

# மீள்குடியேறிய மக்களின் கணிசமான தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன

## துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிப்பு

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இற்றைவரை மீள்குடியேறிய 3 ஆயிரத்து 647 குடும்பங்களின் தேவைகள் கணிசமானளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக துணுக்காய்பிரதேச செயலர்எஸ்.குணபாலன் நேற்று தெரிவித்துள்ளார்.

மேலும், இங்கு இவ்வருட இறுதியினுள் 456 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கபடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 கிராம அலுவலகர் பிரிவின் கீழுள்ள பிரதேசங்களில் 3 ஆயிரத்து 647 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 419 பேர் மீள் குடியேறினர்.

இங்கு இதுவரையில் ஆயிரத்து 698 புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், நேப் திட்டத்தின் கீழ் 235 வீடுகளும் யு.என்.கபிரேட் நிறுவனத்தால் 250 வீடுகளும் இந்திய அரசாங்கத்தின் மாதிரி வீட்டுத் திட்டத்தில் 50 வீடுகளும் யு.எஸ்.ஏ. நிறுவனத்தின் நிதியில் 71 வீடுகளும் இந்திய வீட்டுத் திட்டத்தில் ஆயிரத்து 92 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், யுத்தத்தினால் பகுதியளவில் சேதமடைந்த 460 வீடுகளும் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்காக புதிய கிணறுகளை அமைத்தல், ஏற்கெனவே உள்ள கிணறுகளை புனரமைத்தல் ஆகியவையும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-250)

# மஹிந்த தனக்கு நெருக்கமானவரையே தூதுவராக நியமித்து வருகின்றார்

## கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

தேயிலை தூள் முதலாளி ஒருவரையே ராஜபக்ஷ அரசாங்கம், உலக வல்லரசான அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக அனுப்பி வைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரான அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவரால் நாட்டுக்காக எந்த சேவையும் பெற்றுக்கொடுக்க முடியாது.

62 நாடுகளுக்கு ராஜபக்ஷ அரசாங்கம் தமக்கு நெருக்கமானவர்களையே தூதுவர்களாக நியமித்துள்ளது.

உறவினர்கள், ஓய்வுபெற்ற அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள் என தூதுவர்கள் அனைவரும் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாட்டின் நற்பெயரை பாதுகாக்கும் வகையில் செயற்படவில்லை. இந்த தூதுவர்களுக்கு இராஜதந்திர சேவையில் ஈடுபட தேவையான போதிய அறிவு இல்லை.

அமெரிக்காவின் தூதுவராக ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகளை மதிக்கவில்லை உள்ளிட்ட செயல்களை சுட்டிக்காட்டி அமெரிக்க காங்கிரசில் இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்று நிறைவேற்றப்பட்டது என்றார். (அ)

# அந்தியேட்டி பிற்போடப்பட்டது

## கந்தசாமி தேவரத்தினம் - வேலுப்பிள்ளை கந்தசாமி

துன்னாலை மத்தி கோவிற்கடவையை சேர்ந்த கந்தசாமி தேவரத்தினம் 10/01/2014, வேலுப்பிள்ளை கந்தசாமி 15/01/2014 இறைபதம் அடைந்தார்கள். அவர்களின் அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகள் தவிர்க்க முடியாத காரணமாக 14/02/2014 அன்று நடை பெறமாட்டாது. பின்னர் நடைபெறும் தினம் அறிவிக்கப்படும்.

துன்னாலை மத்தி,
கோவிற்கடவை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(சி-6498)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து
Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION
MONEY TRANSFER

(C-6489)

அதிரடிOffer! மிஸ் பண்ணாதீங்க!

BRANDED PC COMPLETE SET 13,900/= ONLY

PROCESSOR 3.0 GHZ
RAM DDR2 1GB
HARD DISK 160 GB
ROM COMBO
MONITOR 15'
KEY BOARD, MOUSE, SPEAKER (NEW)

Rs.13,900/= ONLY

கணினிகள் மற்றும் கணினி உதிரிப்பாகங்களையும் அனைத்து வித கணினி சேவைகளையும் மிகக் குறைந்த செலவிலும் தரமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

MICRO DGITEL
146, Ponnalai Road,
Manipay.
T.P.: 021 3200999
0777933338

(5586)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அறியாமை சுகம்

இவ்வுலகில் உண்மையாகவே வேதாந்தம் சொல்பவர்கள் இருக்கிறார்கள். உள்ளொன்று வைத்துக்கொண்டு வெளியிலே வேதாந்தம் கூறுபவர்களும் உள்ளனர்.

ஒரு ஊரிலே வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் வியாபாரத்திலே பெரிய புள்ளி. ஆனால் யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டான். மகா கஞ்சன். எச்சில் கையால் காகம் விரட்டாதவன்.

எச்சில் கையென்ன... ஈரக் கையைக்கூட உதற மாட்டான். அப்படிப்பட்ட கசவாரம்.

ஒருநாள் அவன் வாழ்ந்து வந்த ஊருக்கு ஒரு முனிவர் வந்துகொண்டிருந்தார். அவரது வருகையோ வருடத்தில் ஒரு தடவையாக அமையும். ஓரிரு நாட்கள் தங்கி நிற்பார். அதன் பின்னர் போய்விடுவார்.

அந்த முனிவர் வரும் போதெல்லாம் இந்த மகா கஞ்சன் ஓடிப்போய் வரவேற்பான்.

தான் உலகமறிந்த வேதாந்தி மாதிரி அவரிடம் பேசிக் கொண்டிருப்பான்.

"காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை" என்பான். "தர்மம் தலை காக்கும்" இப்படியான பெரிய வார்த்தைகளைக் கூறுவான்.

"பணம் என்ன சேர் பணம்... இன்று ஒருவன் கையிலே இருக்கும், நாளை இன்னொருவன் கையிலே இருக்கும் எல்லாம் மாயம்" என்றெல்லாம் புலம்பியடிப்பான்.

அந்த முனிவரும் இந்த வியாபாரி இப்படிச் சொல்வதைக் கேட்டவுடனே...

"ஏன் அப்படி கூறுகிறாய்? இப்போது கூட நீ சரியென்றால் உனக்கு தீட்சை வழங்கி ஞானத்தைப் போதிக்கின்றேன்" என்றார்.

உடனே அந்த வியாபாரி என்ன சொன்னார் தெரியுமா?

"ஐயோ சுவாமி எப்படி முடியும். எனக்கோ சம்சாரபந்தத்தில் இருந்து விடுபடும் நேரம் வரவில்லை. பிள்ளைகளோ சின்னஞ் சிறுசுகள். அவர்களுக்கெல்லாம் நல்லதொரு வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தி விட்டதன் பின்னர் நீங்கள் கூறுவது போல் செய்யலாம்" என்றார்.

"சரி" யென்று கூறிவிட்டு முனிவர் அடுத்த வருடம் வந்தார். இவனும் வழக்கம்போல வேதாந்தம் பேசினான்.

"சரி... தீட்சை கொடுக்கிறேன்... வா" என்றார்.

பேரன் பேர்த்தியை பார்க்க வேண்டும். நீதிமன்றில் விசாரணை உள்ளது. இவ்வாறு கூறி தயங்க ஆரம்பித்தான்.

அனைத்தையும் கூறுவாய் ஆனால்... குடிப்பதற்கு தண்ணீர்கூட தரமாட்டாய்.

பின்னர் நீண்ட வருடங்கள் கடந்த நிலையில் மறுபடியும் அந்த ஊருக்கு முனிவர் வந்தார். வந்தவர் இவன் கடைக்கும் சென்றார்.

அங்கே அந்த வியாபாரி இருக்கவில்லை. அவனது மகன், தந்தை போலவே அவரது பாணியில் எழுந்து ஓடி வந்து முனிவரை வரவேற்றான்.

"அப்பா எங்கே?" என்று முனிவர் கேட்டார்.

"ஐயோ அதை ஏன் கேட்கிறீர்கள் சுவாமி!. உங்களிடம் தீட்சை பெறவேண்டும்" எனச் சொல்லிக் கொண்டே இருப்பார். அது நிறைவேறாமலே திடீரென ஒரு நாள் நெஞ்சுவலிக்கிறதே என்று கூறியவாறு "பொட்"டென போய்விட்டார். "இவ்வாறு புலம்பினான் பையன்."

இதைக் கேட்ட முனிவருக்கு சிரிப்பு வந்தது. "அவன் எங்கேடா போவான்? உனது தந்தை இங்கேதான் இருக்கிறார். இதோ வாலை ஆட்டியவாறு உன் காலடியிலேயே இருக்கிறார் பார்" என்று நின்று கொண்டிருந்த நாயை சுட்டிக்காட்டினார்.

உடனே முனிவர் அந்த நாயின் தலையைத் தட்டி "பேசடா" என்று கூறினார். அந்த நாய் வேதாந்தம் பேச ஆரம்பித்து "காயமே வெறும் பொய் காற்றடைத்த பை" என்றது.

முனிவர் சொன்னார் "அடேய்! இப்போது எதுவும் கெட்டுப்போகவில்லை நீ விரும்பினால் தீட்சை தருகிறேன் அதன்பின் அழைத்துச் சென்று ஞானம் போதிக்கிறேன் வருவாயா?" என்று கேட்டார்.

உடனே நாய் உருவத்தில் இருந்த வியாபாரி சொன்னார். "ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள். நான் நிறைய சொத்துக்கள் இவ்வுலகில் சேகரித்து வைத்துள்ளேன். எனது பிள்ளைகள் அதனுடைய பெருமை தெரியாமல் இரவு பூராகவும் கதவைத் திறந்து வைத்துவிட்டு தூங்குகிறார்கள். அதனால் இப்படி நாயாகப் பிறந்து இரவு பகலாக சுற்றி சுற்றி காவல் செய்கிறேன். எப்படி சுவாமி வரமுடியும்."

அறியாமையிலேயே சுகம் கண்டு இப்படி வாழும் நபர்களுக்கு எப்படி விடுதலை கிடைக்கும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜெனீவா அமர்வுகளில் நான் பங்கேற்க போவதில்லை

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பங்குபற்றப் போவதில்லையென வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசியல் சம்பந்தமான விடயங்களைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்த்துக் கொள்வார்கள் எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே நாட்டின் உயர்ஸ்தானிகர் கிரேட் லொச்சன் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர் யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள வடக்கு முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் அவரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

காலை 9.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தொடர்ந்த இந்தக் கலந்துரையாடலையடுத்து ஊடகவியலாளர்களுக்கு முதலமைச்சர், சந்திப்பு தொடர்பாக கருத்துக் கூறியிருந்தார்.

முதலமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குபதில்அளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் நான் பங்குபற்றப் போவதில்லை.

மனித உரிமைகள் சம்பந்தமானது என்பதற்கு அப்பால் அரசியல் சம்பந்தமான விடயம் என்பதனால் அதை எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

அதேவேளை பெண்கள் சம்பந்தமாக இந்தக் கூட்டத் தொடரில் பங்குபற்றி பேசுவதற்காக வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான அனந்தி சசிதரனுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை நோர்வே நாட்டின் தூதுவருடான சந்திப்புதொடர்பாக கேட்டபோது, வடக்கு மாகாணத்தில் ஐக்கிய நாடுகள் சபையினால் எப் பேற்பட்ட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படமுடியும்என்பதுதொடர்பாக நேற்று (நேற்று முன்தினம்) ஐ.நாவின் உதவிச் செயலாளருடன் பேசப்பட்ட விடயங் களேநோர்வேநாட்டின் தூதுவருடனும் பேசப்பட்டது.

அரசாங்கமும் மாகாண சபையும் இணைந்து எவ்வாறான செயற்றிட்டங் களை இங்குசெய்ய முடியும்என்பது பற்றியும்ஐநாவினால் இங்கு என்ன செயற்றிட்ட ங்களை முன்னெடுக்கமுடியும்என்பது பற்றியுமே பேசப்பட்டது.

மேலும் வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான (மாஸ்ரர் பிளான்) திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டது.

இதனைவிட வடக்கில் அவசரமாக செய்து முடிக்கப்பட வேண்டிய மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார, வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சுமார் 49 ஆயிரம் கணவனை இழந்த பெண்கள் உள்ளனர். இவர்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றப்பட வேண்டும். இவர்களின் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வித்தரம் மேம்படுத்தப் படவேண்டியுள்ளது போன்ற பல்வேறு விடயங்களைத் தாம் எடுத்துக் கூறியதாகவும் அதற்கு அரசுடன் மாகாண சபையும் இணைந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஐ.நாவின் உதவிகளை விரைவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுமெனவும் நோர்வே தூதுவர் உறுதியளித் ததாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 100 |
| தக்காளி | 70 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 50 |
| கரட் | 70 | 80 | 100 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 70 | 80 |
| பாகற்காய் | 80-110 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 50-80 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 15-30 | 40 | 40 |
| பயற்றங்காய் | 120-200 | 150 | 100 |
| லீக்ஸ் | 40-70 | 100 | 80 |
| பீற்றூட் | 20-40 | 70 | 50 |
| கறிமிளகாய் | 80-120 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 200-300 | 180 | 440 |
| போஞ்சி | 60 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 30-50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 80-120 | 80 | 100 |

# இராசி பலன்

13.02.2014
(மாசி 01, வியாழக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 4.20 மணிவரை
பூசம் முன்னிரவு 11.34 மணிவரை
இராகுகாலம் 2.04-3.34 மணிவரை
சுபநேரம் 08.04-09.34 மணிவரை
நடேசரபிஷேகம், அமிர்தசித்தம்

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்** தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், ஆரோக்கியமான நாள், அந்நிய தேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறலாம், கட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

**தனுசு** திட்டமிட்ட பணிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படும், போசன சுகமுண்டு, நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்துகொள்ளலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், சொந்தபந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** உடல்நலம் சீராகி உற்சாகப்படுவீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மீனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி கிராமத்தை அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்

களுத்துறை மாவட்டத்தின் ஹொறணைப் பகுதியில் பாரம்பரிய முகமூடி கிராமத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து பயனாளிகளின் பயன்பாட்டுக்காக கையளித்தார்.

களுத்துறை மாவட்டத்திற்கு நேற்று முன் தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டார்.




அப்பகுதி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் தேசிய அருங் கலைகள் பேரவையினால் 80 பயனாளிகளுக்கு 2 மில்லியன் ரூபா செலவில் தொழிற்கூடங்கள் வீடுகள் தோறும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

நிகழ்வின் இறுதியில் பயனாளிகளுக்கு தொழிற்துறை சார்ந்த தொழில் உபகரணங்களும் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க உள்ளிட்ட அமைச்சினதும் ஏனைய துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)




# காணாமற்போனோர் பற்றிய விசாரணை நாளை யாழில்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் நாளை முதல் நான்கு நாட்கள் யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை முன்னர் அறிவித்ததன் பிரகாரம் திட்டமிடப்பட்டபடி நாளை வெள்ளிக் கிழமை காலை9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை இந்த விசாரணைக்கு காணாமற் போனவர்களின் உறவினர்கள் சாட்சியமளிக்கவுள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான யுத்த காலப்பகுதியில் வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்றது.

காணாமற் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நாளை தொடர்ந்து மூன்று நாட்கள் (14, 15, 16 ஆம் திகதிகளில்) யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது என ஆணைக் குழுவின் செயலாளர் எப்.டபிள்யூ. குணதாச அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் பல கட்டங்களாக இடம்பெறுகின்ற இவ் விசாரணை அமர்வின் முழு விபரங்கள் வருமாறு,

நாளை 14 ஆம் திகதி வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளினைச் சேர்ந்தவர்களிற்கு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தில் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை விசாரணை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி தென்மராட்சி பிரதேசசபைக்குட்பட்ட மறவன்புலோ,சாவகச்சேரி நகரம், சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கு, கல்வயல், நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, நுணாவில் மேற்கு , மட்டுவில் நுணாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் வடக்கு,மட்டுவில் மேற்கு, சந்திரபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவினை சேர்ந்தவர்களிற்காக விசாரணை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.பிரதேச செயலகத்தினை சேர்ந்த யாழ்.நகர் கிழக்கு யாழ். நகர் மேற்கு, நாவாந்துறை வடக்கு, நாவாந்துறை தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவினை சேர்ந்தவர்களிற்கான விசாரணை யாழ். பிரதேச செயலகத்தில் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

மறுநாள் 17 ஆம் திகதி யாழ்.பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத் துறை கிழக்கு, சுண்டுக்குளி தெற்கு, சுண்டுக்குளி வடக்கு- ஆகிய கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்தவர்களிற்கான விசாரணை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை இடம்பெறவுள்ளது என ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலர் அறிவித்துள்ளார். (அ-4-6)

## மலர் வெளியீடும் மூத்தோர் கௌரவிப்பும்

(மல்லாகம்)

சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி அங்கனமக் கடவை ஶ்ரீமீனாட்சி கண்ணகை அம்மன் ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீடும் மூத்தோர் கௌரவிப்பும் இன்று வியாழக்கிழமை ஆலய பரிபாலன சபைத்தலைவர் செ.குமர குருபரன் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையினை பண்டிதர் தி. பொன்னம்பலவாணரும் வெளியீட்டுரையினை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் ஏ.அனுசாந்தனும் வழங்கவுள்ளார்கள்.

மூத்தோர் கௌரவிப்பில் ஊருணி உத்தமர் என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. அமரர்களான பொ.முருகேசம்பிள்ளை, நா.சுந்தரலிங்கம், நா.விஸ்வலிங்கம் ஆகியோருக்கும் க.மளவராயர் (ஓய்வுபெற்ற அதிபர்), நா.கற்பகவல்லி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பிரம்மஶ்ரீ ச.சோமா ஸ்கந்தக் குருக்கள் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோரு க்கும் இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (அ-21)

## தனியார் பேருந்துகளும் பற்றுச்சீட்டு வழங்க வேண்டும்

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



தனியார் பேருந்துகளில் நாளை மறுதினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டுமென யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். இ.போ.ச .குழுவினருக்கும் தனியார் பேருந்து குழுவினருக்கும் இடையேயான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றபோதே மேற்படி கருத்து முன்வைக்கப் பட்டது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பருத்தித்துறை போக்குவரத்து சம்பந்தமாக அச்சிடப்பட்ட நேர அட்டவணையை விநியோகித்து இருதரப்பும் அட்டவணையை மீளாய்வு செய்து சுமுகமாக முடிவெடுக்க வேண்டும். தனியார் போக்குவரத்து பேருந்துகளில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும்.பலாலி வீதி போக்குவரத்து அட்டவணையையும் மேலதிக பிரச்சினைகளையும் மீளாய்வு செய்து இருதரப்பினரும் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்றார்.

இதில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் கருத்துத் தெரிவிக்கையில்,

சட்ட ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டால் உடன் யாழ். போக்குவரத்து பிரிவு அத்தியட்சகர் சமந்த டி சில்வாவின் கைத்தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளலாம். இது சம்பந்தமான பிரச்சினைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்தாலோசித்து எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறும் கூட்டத்தில் ஒரு தீர்வை எடுப்போம் என்றார்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட போக்குவரத்து பிரிவு அத்தியட்சகர் சமந்த டி சில்வா, யாழ்.மாவட்ட தனியார் போக்குவரத்து சங்க தலைவர் பொ.[illegible] தலைமையில் 6 பேரும் வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் [illegible] தலைமையில் 9 பேரும் பங்கு பற்றினர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அதிபர் நியமனம்

(நல்லூர்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் வி.இராஜசேகரம் ஓய்வு பெற்றதை யடுத்து தற்போது புதிய அதிபராக அச்செழு சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் எஸ். வேலழகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-134)

## மஹோற்சவம்

சுழிபுரம் வட கிழக்கு சாத்தாவோலை அருள் மிகு சம்புநாதேஸ்வரி சமேத சம்புநாதேஸ்வரர் தேவாலயத்தின் சிவராத்திரி மஹோற்சவம் எதிர்வரும் புதன்கிழமை மு.ப.11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


குறித்த மஹோற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 28ஆம் திகதி தீர்த்தோற்சவத் திருவிழாவும் தொடர்ந்து மார்ச் மாதம் 7 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (அ-4)

## ஓய்வூதிய நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

வடமராட்சி தெற்கு மேற்கு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 6 ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிதியத்தின் தலைவர் எஸ்.வீரசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஶ்ரீ கலந்துகொள்ளவுள்ளார். (அ-4)

உ
நமசிவாய



# கீரிமலை-நகுலேஸ்வரம்

## அருள்மிகு ஸ்ரீநகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமி திருக்கோயில்

## மஹோற்சவ சிறப்பிதழ்-13.02.2014

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்**
**மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே**

சிவநேயச் செல்வர்களே!

சரித்திரப் பிரசித்தி பெற்றதும் வேண்டுவார் வேண்டுதற்கிணங்க அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீநகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானுக்கு 25 வருடங்களாக மஹோற்சவம் நடைபெறாமல் இருந்தது யாவரும் அறிந்ததே. இவ்வருடம் முதல் மஹோற்சவப் பெருவிழா நிகழ எம்பெருமான் பெருங்கருணை சுவர்ந்துள்ளார்.

நிகழும் மங்கலகரமான விஜய வருடம் மாசி மாதம் 02 ஆம் நாள் (14.02.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மேல் வரும் சுபமுகூர்த்தத்தில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. பக்தர்களின் உதவியினைத் தொடர்ந்து பதினைந்து தினங்கள் பகல், இரவு விஷேட அபிஷேக அலங்கார பூஜைகளுடன் எம்பெருமான் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

## உற்சவ கால விபரம்

26.02.2014 புதன்கிழமை: மாலை 3.00 மணிக்கு பிச்சாடனர் உற்சவம், மாலை 7.00 மணிக்கு சப்பறத்திருவிழா

27.02.2014
வியாழக்கிழமை: காலை 7.00 மணியளவில் வசந்தமண்டப் பூஜை நடைபெற்று
காலை 8.00 மணிக்கு இரதாரோஹணம் நடைபெறும். எம்பெருமான் திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.
பிற்பகல் 3.00 மணிக்கு பச்சை சாத்தி விஷேட பூஜைகளுடன் வசந்தமண்டபத்திற்கு சென்றடைதல்
இரவு 8.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து கிரியைகள் நடைபெறும்.
நள்ளிரவு 12.00 மணிக்கு லிங்கோற்பவ பூஜை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மூர்த்திகள் கற்பூர ஜோதியுடன் திருவீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சிகொடுப்பர்.

28.02.2014
வெள்ளிக்கிழமை:- அதிகாலை 6.00 மணிக்கு கண்டகி தீர்த்தத்திற்கு எம்பெருமான் வீதியுலாவாகச் சென்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.
பிற்பகல் 3.00 மணிக்கு சகல மங்கல வாத்தியங்களுடன் ஆலயத்திற்கு எழுந்தருளுவார்.
மாலை 7.30 மணிக்கு துவஜா அபரோஹணம் (கொடியிறக்கம்) நடைபெறும்.

**இக்காலங்களில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் சைவ ஆசார சீலர்களாக தங்கள் வீடுகளை சுத்தமாக வைத்து சைவ அனுஷ்டானங்களைப் பின்பற்றி சைவசமய உடைகளை அணிந்து வருதல் சிறந்தது ஆகும்.**

**மஹோற்சவ பிரதம குரு: பிரம்ம ஸ்ரீ இராஜராஜ ஸ்ரீ ந.குமாரசாமிக்குருக்கள்**
**(ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும், நகுலேஸ்வரம், கீரிமலை)**

- 13.02.2014 வியாழக்கிழமை நடைபெறும் மஹாகணபதி ஹோமத்தில் உபயகாரர்கள், பக்தர்கள் வருகை தந்து எம்பெருமானுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
- இம் மஹோற்சவம் சிறப்பாக நடைபெறும் வேளையில் தாங்கள் தங்கள் கஷ்டநஷ்டங்களை எம்பெருமானிடம் வேண்டிப் பிரார்த்தித்து எம்பெருமான் அருளாசிகளைப் பெறுவீர்களாக!
- மேற்படி பூஜைக்குத் தேவையான அர்ச்சனைப் பொருட்கள், நெய்தீபம் ஆகியவற்றை ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க 113 அடி உயரமுள்ள 9 தளம் கொண்ட இராஜகோபுரத்தின் 8 ஆம் தளம் நிர்மாணிக்கப்படுகின்றது. அதற்கு பெருந் தொகையான பணம் தேவைப்படுகிறது. ஆகவே பக்தர்களாகிய நீங்கள் பணமாகவோ, பொருளாகவோ தந்து இத் திருப்பணியைப் பூர்த்தியாக்கி எம்பெருமானின் கிருபாகடாட்சத்தைப் பெறுவீர்களாக.**

முக்கிய குறிப்பு: தனிப்பட்ட முறையில் அழைப்புத் தரமுடியாத காரணத்தினால் இந்த உற்சவ காலத்தில் வழமையாக பங்குபற்றும் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் வருகைதந்து பஜனை, சமயச் சொற்பொழிவு என்பவற்றில் பங்கு கொள்வதற்கு முன் கூட்டியே ஆலயத்தொலைபேசியில் (021 790 0470) தொடர்பு கொள்ளவும்.

மாசிமகம் பற்றிய அறிவித்தல்: பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மக நட்சத்திரம் மகா மகமாகக் கருதப்படுவதனால் எல்லா அடியார்களும் நெய்தீபம் ஏற்றி பிரார்த்தனை செய்து அவனருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

இந்த உற்சவத்தை ஒட்டி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தொடர்பு: 021 790 0470**

**இறை பணியில் நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாகரர் இராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள், ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்.**

சுபம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண விவசாயிகளுக்கு ஓய்வூதியம் கிளி.யில் வழங்கப்பட்டது

(கிளிநொச்சி)

**வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் விவசாய ஓய்வூதியம் பெற்று இடைநிறுத்தப்பட்ட விவசாயிகளுக்கு மீளவும் ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.**

இந்நிகழ்வில் விசேட கருத்திட்ட அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சருமான சந்திரசேனவும், மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வை.தவநாதன் மற்றும் தர்மபாலவும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கினர்.

1987 ஆம் ஆண்டு அமைச்சர் காமினி ஜெயசூரியவால் ஆரம்பிக்கப்பட்ட விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் 18 வயது தொடக்கம் 55 வயதிற்கிடைப்பட்ட விவசாயிகள் அனைவரும் இணைந்து கொள்ளக்கூடியதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

அதற்கமைவாக விவசாயி ஒருவர் 60 வயதை எட்டுகின்ற நிலையில் அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

அத்தோடு ஓய்வூதியம் பெறுபவர் இறக்கின்ற சந்தர்ப்பத்தில் அவருக்கு மரணப் பணிக்கொடையும் வழங்கப்பட்டதோடு விவசாயி பலவீனமடைகின்ற சந்தர்ப்பத்தில் அவ்விவசாயிக்கு பலவீனக் கொடுபபனவும் வழங்கப்பட்டது. அந்நிலையில் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை காரணமாக இவ் ஓய்வூதியத் திட்டம் இடையில் கைவிடப்பட்டது.

தற்போது இவ் ஓய்வூதியத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்ற நோக்கில் மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அம்பாந்தோட்டையில் ஜனாதிபதியினால் இத்திட்டம் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டநிலையில் தொடர்ந்து குருணாகலிலும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயிகளுக்கு கிளிநொச்சியிலும் விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

அதற்கமைவாக இவ் ஓய்வூதியத்திட்டத்தில் நாட்டில் 9 இலட்சத்து 59 ஆயிரத்து 254 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 650 பேர் ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்கின்றனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்ட இவ் ஓய்வூதியக் கொடுப்பனவு ஜனாதிபதியால் 5 ஆயிரம் ரூபாவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதியமைச்சர் சந்திரசேன,

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பன்வை நிதி அமைச்சின் அனுசரணையுடன் விவசாய காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டுடன் இவ் ஓவ்வூதியத் திட்டம் முடிவுற்றிருந்த நிலையில், ஜனாதிபதியால் இத்திட்டம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை இத்திட்டம் அடுத்து வரும் காலங்களில் இடைநிறுத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் எவையும் ஏற்படாத வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு மீளவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேலும் 1987 ஆம் ஆண்டு அமைச்சர் காமினி விஜய சூரியவால் 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டபோதும், 75 மில்லியன் ரூபாய்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றது.

இந்நிலையில், 2011 ஆம் ஆண்டுடன் கிடைக்கப்பெற்ற நிதி முழுவதும் முடிவடைந்த நிலையில் ஓய்வூதியமும் இடைநிறுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் விவசாயிகளிடமிருந்து சிறு தொகை பணம் அறவிடப்பட்டு இருநூறு ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

பின் அத்தொகையை ஐந்நூறாக உயர்த்தியதோடு பின் ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால், வழங்கும் தொகை அதிகரித்த போதும் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் தொகை அதிகரிக்கப்படவில்லை.

இதனால் குறித்த செயற்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரியில் முடிவடைந்து போனது. இந்நிலையில்தான் இத்திட்டத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறைசேரியில் இருந்து ஆயிரம் மில்லியன் ரூபாவையும் பொபிசெத லொத்தர் நிதியிலிருந்து 350 மில்லியன் ரூபாயும் காப்புறுதி நிதியிலிருந்து ஒரு தொகைப் பணத்தையும் பெற்றே இத்திட்டத்தை மீளவும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

இத்திட்டம் தொடர்ந்தும் நிலை பெறுவதற்காகவே அவர் விசேட திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளார் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் விவசாயக் காப்புறுதி பணிப்பாளர் நாயகம் சம்பிக்க வீரசிங்க, கமத்தொழில் காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் விநாயகமூர்த்தி ஆகியோரும் மற்றும் பிரதேச செயலர்கள் அரச கமநல சேவை உதவி ஆணையாளர்கள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வெளிநாடுகளுக்கு பெண்களை அனுப்புவதை தடுக்க பரிசீலனை

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களை அனுப்பும் நடவடிக்கைக்கு தடை விதிக்க இலங்கை அரசாங்கம் பரிசீலித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகள் மாத்திரமன்றி வேறு வெளிநாடுகளுக்கு இலங்கை பணிப் பெண்களை அனுப்புதல் மட்டுப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயத்தை குவைத்திற்கான இலங்கை தூதுவர் சி.ஏ.எச். எம்.விஜேரட்ன தெரிவித்தார். குவைத்தில் மொத்தமாக ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இலங்கையர்கள் பணியாளர்களாகவுள்ளனர்.

அவர்களில் 80 ஆயிரம் பேர் வீட்டுப் பணியாளர்களாக செயற்ப டுகின்றனர்.

பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் சமூக குடும்ப பிரச்சினைகள் பெருமளவில் அதிகரித்துவருவதாக குவைத்திற்கான இலங்கை தூதுவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-4)

# மல்லாவி வைத்தியசாலை விரைவில் தரமுயர்வு பெறும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள மல்லாவி வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலையாக இவ்வருடத்திற்குள் தரம் உயர்த்தப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அமிர்தராஜா திலீபன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 17 வைத்தியசாலைகள் இருக்கின்றன. இருந்தும் பல வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் சிகிச்சைக்கு வருகின்றவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அதிலும் குறிப்பாக நட்டாங்கண்டல், துணுக்காய், ஐயன்குளம் உள்ளிட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர்கள் இல்லை. இந்த வைத்தியசாலைகளுக்கு மல்லாவி வைத்தியசாலையிலுள்ள வைத்தியர்களைக் கொண்டு வெளிநோயாளர் பிரிவு மட்டும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், மல்லாவி வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலையாக இவ்வருடத்திற்குள் தரம் உயர்த்தப்படவுள்ளதுடன், அங்கு புதிய வைத்தியர்களும் கடமையாற்றுவதற்கு வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-250)

## பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட (வடமராட்சி வடக்கு) பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான பிரதேச விளையாட்டு விழாவினது போட்டிகள் தொடர்பான அட்டவணை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தயாரிக்கப்பட இருப்பதனால் தவறாது விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் கேட்டுள்ளார். (க)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 69 ¼ செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / 2 கம்பனி முகவர்<br>தொ.இ: B/1071 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 44உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: G/1538 |
| பிறப்பு: 1959 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: 4 ¼ சூரி செவ் 9இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L / சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும், விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/1072 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 32 சூரி செவ் 10 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: G/1543 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 65 ¼ செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / UK - PR<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/1073 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 32 ¼ உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/1545 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருக்சீரிடம் 4<br>கி.பா: 39 செவ் 12 ல்<br>உயரம்: 6'தகைமை/தொழில்: Bachelor of Science Information Technology / Business Development Officer (USA – Citizen)<br>தொ.இ: B/1074 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 123 ¼ .செவ் 1 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, Dip in Edu / ஆசிரியர்<br>தொ.இ: G/1547 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது ஆண்டு கால யுத்தமும் யாழ். மாவட்டத்தின் சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களும் பிரச்சினைகளும்



**யா/ கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் நிறுவுநர் வீரபாகு சிற்றம்பலமுடையார் நினைவுப்பேருரை, பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சின்னத் துரை விஜயகுமார் அவர்களால் 12.01.2014 அன்று ஆற்றப்பட்டது.**

### அறிமுகம்

ஏறத்தாழ இருபத்தைந்து வருட ஆயுதப்போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ்ச் சமூகம் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரப் பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றது. 1980களிலிருந்து படிப்படியாக ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்க ளின் விளைவுகள் யுத்தம் முடிவடைந்த பின்னர் வெளிப்படையாக காணப்படுகிறது. அவ்வாறாக ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களையும் முனைப்புப் பெற்றிருக்கின்ற சில பிரச்சினைகளையும் எடுத்துக் கூறுவதே இந் நினைவுப் பேருரையின் நோக்கமாகும். இங்கு யாழ். மாவட்டம் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டிருப்பதோடு அம் மாவட்டத்தின் பொதுவான சமூகப் பொருளாதார நிலையே எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பேச்சிற்குரிய நேரம் வரையறுக்கப்பட்டுள்ளதால் சுருக்கமாக நினைவுப்பேருரை ஆற்ற விரும்புகிறேன். 1970 ஆம் 80 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகையில் இரண்டாம் நிலையில் இருந்த மாவட்டமாகவும் மிகப்பெரிய கல்விமான்களையும் நிர்வாகிகளையும் கொண்ட மாவட்டமாகவும் யாழ்ப்பாணம் காணப்பட்டது. ஆனால் 1980 இன் நடுப்பகுதிக்குப் பின்னர் தீவிரமடைந்த உள்நாட்டு யுத்தமும் அதன் அழிவுகளும் எமது சமூக பொருளாதார அரசியல் இருப்புக்களில் பாரிய தாக்கத்தினை செலுத்தியுள்ளது. உண்மையில் பொருளாதார ரீதியில் நாம் முன்னேற்ற நிலையில் உள்ளோமா அல்லது தேக்க நிலையில் உள்ளோமா என்று நாம் தடுமாற்றமாக சிந்திக்கலாம்.

### சனத்தொகை பரம்பலில் மாற்றம்

உண்மையில் ஆற்றல் மிக்க இள்ளஞர் பட்டாளம், அறிவுசார் மூலதனம், மெய்ச்சொத்துக்கள் போன்றன அழிவடைந்து விட்டமை யுத்தத்தின் மிகப்பெரிய எதிர் விளைவாகும். குறிப்பாக சனத் தொகை அளவில் யாழ்ப்பாண மாவட்டம் சுருங்கியநிலைக்கு யுத்தம் கொண்டு வந்துவிட்டமை ஓர் பாதகமான விளைவாகும். இத்தகைய மாற்றமானது அரசியல் ரீதியாக வலிமையற்ற நிலைக்கு தமிழர்களை எடுத்து வந்திருக்கின்றது. 1981ஆம் ஆண்டு ஏறத்தாழ 7 இலட்சத்து 50 ஆயிரம் அளவான சனத்தொகையைக் கொண்டதாக யாழ். மாவட்டம் காணப்பட்டது. மல்தூசிய சனத்தொகை கோட்பாட்டின்படி சனத்தொகையானது ஒவ்வொரு 25 வருடமும் இரட்டிப்பாகும் என்பதாகும். அதன்படி நோக்கு கின்ற போது அண்ணளவாக யாழ். மாவட்ட சனத் தொகை 17 இலட் சங்களாக (170000) இன்று இருந்திருக்க வேண்டும்.

எனினும் நாம் மல்தூசிய சனத்தொகைக் கோட்பாடுகளை விடுத்து நோக்கினாலும் கூட யாழ். மாவட்ட சனத்தொகையில் வேகமான பின்திரும்பு நிலையையே அவதானிக்க முடிகிறது. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதங்களின் அடிப்படையில் நோக்கினாலும்கூட குறைந்தது 13 அல்லது 14 இலட்சங்களேனும் சனத்தொகை இருந்திருக்க வேண் டும். ஆனால் 2007/2008 புள்ளி விபரங்களின்படி யாழ்.மாவட்ட சனத்தொகையானது 559619 ஆகும். இது யாழ்ப்பாண மாவட்ட சனத்தொகையில் பின்திரும்பிய நிலையாகும்.

இன்று பதினான்கு இலட்சங்கள் (140000) சனத்தொகையை நாம் கொண்டிருந்தால் எமது வாக்குப் பலமும் அதிகமாகவே இருந்திருக்கும். பெருமளவான கல்வி கற்றவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியமை, ஆற்றல்மிக்க சாதிக்கக் கூடிய திறமையா்ன இளைஞர்கள் கொல்லப்பட்டமை, சர்வதேச பரந்துபட்ட அரசியல் அறிவும் நன்கு இராஜதந்திரம் நிறைந்த மூத்த அரசியல் விற்பன்னர்களை இழந்துவிட்டமை போன்றமை காரணமாக உள்நாட்டு அரசியலில் மிகப் பெரிய வெற்றிடத்தை எதிர்நோக்கி வருகின்றோம். இவ்வாறான ஓர் நிலைமை சாதாரண பொருளாதார அனுபவங்களுக்குப் புதிதாகும். 1990களின் பின்னர் தீவிரமடைந்த உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் பெருமளவானோர் ஐரோப்பா மற்றும் கனடா உட்பட்ட நாடுகளுக்கு இடம் பெயர்ந்தமை, பெருமளவானோர் உள் நோக்கி இட ம்பெயர்ந்தமை, பெருமளவான இளைஞர்கள், குழந்தைகள், முதியவர்கள் போன்றோர் யுத்தத்தினால் கொல்லப்பட்டமை இதற்குரிய மூல காரணமாகும். உண்மையில் பொருளாதார ரீதியாக, புவியியல் ரீதியாக சிந்திப்போர் சனத்தொகை வீழ்ச்சி ஓர் நல்ல மாற்றம் என சிந்திக்கலாம். ஏனெனில் சனத்தொகை அடர்த்தி குறைவாக உள் ளமை அமைதியான நெருக்கடிய ற்ற வாழ்வுக்கு சாதகம் என ஒரு சாரார் வாதிடலாம்.

ஆனால் உண்மையில் இலங்கையின் அரசியல் யாப்புக்களின் அடிப்படையில் நின்று பார்க்கின் றபோது எங்களது அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் உள்நாட்டு மட்டத்தில் மிகப்பெரிய பாதகமான தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. சனத்தொகையிலேற்பட்ட வீழ்ச்சி எமது வாக்கு வல்லமையினை குறைத்தமை காரணமாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகையிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இங்கு குறிப்பிடக்கூடிய விடயம் யாதெனில் உள்நாட்டு மட்டத்தில் இவ்வாறானதொரு பாதகமான விடயம் ஏற்பட்டாலும்கூட தமிழ்மக்களின் ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை நோக்கிய நகர்வு ஒரு புதிய வகையான அரசியல் பலத்தை தமிழர்களுக்கு தந்துள்ளது.

புலம்பெயர் தளத்தில் வலிமையான அமுக்க குழுக்கள் தோன்றியிருக்கிறது. இந்த தமிழ் அமுக்க குழுக்கள் (Pressure group) வெளி நாட்டு அரசியல் களத்தில் தாக்கத்தை செலுத்தக்கூடிய அளவுக்கு பலமாக இருந்து வருகிறது. இதன் ஒரு விளைவே ஐ.நா சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா, கனடா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகள் குறைந்தபட்ச பொறிமுறையொன்றை உருவாக்கியிருக்கின்றது. மேலும் மிகச் சிறிய ஒருமாவட்டத்திற்கு மிகப்பெரிய வல்லரசு நாடான பிரித்தானியப் பிரதமர் வருகைதந்தும் இலங்கையில் இருந்து கொண்டே இலங்கைக்கு நிபந்தனை விதித்ததும் பிரித்தானியாவில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அமுக்க குழுக்களின் விளைவேயாகும். இவ்வாறான பிரித்தானிய பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தமை இலங்கை அரசுக்கு கடும் அரசியல் அழுத்தங்களை வழங்கியிருக்கின்ற அதேவேளை இது இந்திய அரசியலிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை கையாள்வது தொடர்பில் சலசலப்பு நிலைமையொன்றை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடத்தில் நான் ஒன்றை கூற விரும்புகிறேன்.

எமது முதலமைச்சர் நன்கு ஆழமான அகன்ற சிந்தனை உடையவராக இருப்பதால் தமிழர்கள் அதீத நம்பிக்கையை அவர் மீது கொண்டிருக்கிறார் கள். நீண்ட ஆழமான அரசியல் இடைவெளிகளை யுத்தம் ஏற்படுத்தினாலும் வடமாகாண முதலமைச்சர் தமது இராஜதந்திர நகர்வு மூலம் இக் குறையை போக்குவார் என சாமானியர்களிலிருந்து படித்தவர்கள் வரை எதிர்பார்த்து நிற்கின்றனர். இப்போதிருக்கின்ற உலக ஒழுங்கு ஒப்பீட்டுரீதியாக தமிழர்களுக்கு சாதகமாகவே உள்ளது. இதனை சரியாகவும் விவேகத்துடனும் எமது தமிழ் அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளுமானால் ஓரளவுக்கேனும் தமிழ் மக்கள் அடிப்படை அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

### மொழி

அரசியல் களத்தில் மட்டுமல்லாது கல்வித்துறையிலும் யுத்தம் நீண்ட வரட்டுத்தன்மையை ஏற்படுத்தி விட்டது. பல மொழியாற்றல் நிறைந்த பன்முகத்தன்மை கொண்ட சமூக அரசியலில் அகன்ற அறிவு கொண்ட கல்விமான்களுக்கு தமிழ் சமூகத்தில் பற்றாக்குறை நிலவி வருகின்றது. உயர்கல்வி நிலையங்களிலும் இந்த நிலைமையை நாம் அவதானிக்க முடிகிறது.

கடந்த 30 வருடங்களில் இலங்கைத்தீவில் கல்வி ஆற்றல் மிக்க சிங்கள கல்விமான்கள் பெருமளவில் உருவாகியிருக்கிறார்கள். இது ஒரு தலைகீழான போக்காகும். மொழி எதிர்ப்புக் கொள்கை கொண்ட சமூகமாக நாம் வாழ்வதுஉதாரணமாக அல்லஜேர்மனி,பிரான்ஸ், செக்குடியரசு, இத் தாலி, யப்பான் போன்ற நாடுகளை உதார ணமாகக் கொண்டு தாய்மொழி மூலமே எமது சமூக பொருளா தாரத்தை கட்டியெழுப்பமுடியும்என்றசிந்தனை இலங்கைக்கு இப்போதைக்கு பொருந்துவதாக இல்லை.

ஏனெனில் மேலே கூறிய நாடுகளில் அவர்களது மொழியில் எந்தவோர் விடயத்தையும் உடனுக்குடன் மொழி மாற்றம் செய்யப்பட்டு அச்சிடப்படுகின்றது. குறித்த நாட்டு மொழியினைக்கொண்டே அந்த நாட்டில் வாழ்கின்ற ஒருவர் தனது அறிவை வளர்த்துக் கொள்ள முடியும். அவ்வாறான ஒரு நிலையிலிருந்தும் கூட இன்றைய உலகமயமாதல் சூழலில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஆங்கிலம் முக்கியப்படுத்தப்பட்டுவருகின்றது. ஆனால் யுத்தத்திற்குப் முன்னர் எமது கல்வித்துறையில் உள்ளோர், குறிப்பாக பாடசாலை அதிபர்கள், பல்கலைக்கழகங்களில் பணிபுரிவோர், ஏனைய நிறுவனங்களில் பணிபுரிவோர் போன்றோர் ஆங்கிலத்தில் புலமை கொண்டிருந்தனர். ஆனால் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாம் ஒரு மொழிக் கொள் கைக்குள் அமிழ்ந்து தனித்தீவில் கைவிடப்பட்டு விழிபிதுங்கி நிற் கின்றோம்.

உண்மையில் உலக அனுபவங்களின் அடிப்படையில் ஒன் றைக் கூற விரும்புகின்றேன். நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் ஒருவர் நல்லதைச் செய்ய விரும்பினால் பல மொழிகளைக் கற்றுக் கொள்ளுங்கள் என்பதாகும். பல்கலைக்கழகங்களில் சமூக பொருளாதார அறிவியல் நூல்களை தமிழ் மொழியில் பெற்றுக் கொள்வது கடினமாகும். பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி மூலம் பாடங்கள் கற்பிக்கப்பட்டாலும் அவை தொடர்பான விடயங்களை வாசித்து அறிவதற்கு ஆங்கிலம் அவசியமாகும்.

அதேபோல் சிங்கள மொழியைக் கற்றுக் கொள்வதும் சிறப்பானதாகும். உண்மையில் பல மொழிகளைக் கற்பதன் மூலமே நம் தாய் மொழியை வளப்படுத்திக் கொள்ள முடியும். புதிய அறிவு சார் விடய ங்களை எமது மக்களிற்கு வழங்க முடியும். மொழி எதிர்ப்பு என்பது சரியான விடயமல்ல என்பதை நன்கு உணர்ந்தமையால்தான் 2000 ஆண்டுகளுக்குப் பின்னர் எமது விடுதலையை முன்னெடுத்தோர் ஆங்கிலக் கல்விக்கு படிப்படியாக முன்னுரிமை வழங்கினர். ஆங்கிலப் பாட சாலைகளை நிறுவிக் கொண்டனர்.

30 வருட காலமாக யுத்தத்தின் விளைவாக சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளிலிருந்து சற்றுத் தூர த்திலேயே நாம் இருந்து வருகின்றோம். ஆங்கிலத்தில் புலமை வாய்ந்த ஆசிரியர்களுக்கு யாழ். மாவட்டத்தில் கடுமையான பற்றாக்குறை இருந்து வருகின்றது. பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை இருந்து வருகிறது. தற்போது மொழி தொடர்பான புரிதல் ஏற்பட்ட போதும் அது உயர் வளர்ச்சி நிலைக்கு வருவதற்கு அதன் பலாபலன்களை எமது சமூகம் அனுபவிப்பதற்கு இன்னும் 10 அல்லது 20 வருங்கள் எடுக்கலாம். உலகமயமாதலின் சூழ்நிலையில் அரசியல் உரிமைகளை வேண்டிப் போரிடவும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கும் எமது அடிப்படை அரசியல் சுரண்டலை வெளிப்படுத்தவும் ஆங்கிலம் உட்பட்ட மொழிக ளைப் பயன்படுத்த முடியும். மொழி ஒரு கருவி. அக் கருவியை நன்றாக கூர்மையாக்கி எமது தேவைக்கு பயன்படுத்துவதுதான் அறிவுத் தனமாகும். (தொடரும்)

Dr.சி.விஜயகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்



கல்வித் தரிசனம்

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராமு சுயநலவாதியா?



**வி**ஜயபுரியில் ரத்னாகரன் என்ற பணக்கார வியாபாரிக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர்.

முதல் இரண்டு பிள்ளைகளும் திருமணம் செய்து கொண்டு தங்கள் தந்தையுடன் கூட இருந்து அவருடைய வியாபாரத்தில் உதவி செய்து வந்தனர்.

ஆனால், அவருடைய மூன்றாவது பிள்ளையான ராமுவிற்கு மட்டும் வியாபாரத்தில் நாட்டமேயில்லை.

இயற்கையிலேயே மிகவும் தயாள குணம் படைத்த ராமு அவனை நாடி யார் எந்த உதவி கேட்டாலும் உடனே செய்து விடுவான்.

ராமுவின் போக்கு அவன் பெற்றோருக்குக் கவலையளித்தது.

ஒருநாள் ராமுவைப் பற்றி ரத்னாகரன் கவலையுடன் தன் நெருங்கிய நண்பரிடம் பேசிக் கொண்டிருக்கையில், அவருடைய நண்பர், "எனக்கு ராமுவைப் பற்றி நன்றாகத் தெரியும். மிகவும் தயாள குணம் படைத்தவன். என்னுடைய பெண் மனோரமா மிகவும் புத்திசாலி.

அவளை ராமுவிற்குத் திருமணம் செய்து கொடுத்தால், அவள் அவனைத் திருத்திவிடுவாள்" என்றார். நண்பருடைய யோசனை சரியென்று தோன்றவே, ரத்னாகரன் அதற்கு சம்மதிக்க விரைவிலேயே ராமுவின் திருமணம் மனோரமாவுடன் இனிதே நடைபெற்றது.

ஒருநாள் மனோரமா ராமுவிடம், "உங்களை உதவி செய்ய வேண்டாம் என்று தடுக்கவில்லை. ஆனால் நீங்கள் செய்யும் உதவியினால் ஏதாவது பயன் இருக்கிறதா என்று நீங்கள் யாருக்கெல்லாம் தானம் கொடுத்தீர்களோ அவர்களிடம் சென்று ஆராய்ச்சி செய்யுங்கள்.

அவர்கள் உங்கள் உதவியினால் சரியானபடி பயன் அடைந்தார்கள் என்று தோன்றினால், நீங்கள் தானம் செய்து கொண்டேயிருங்கள். இல்லையேல் உங்கள் சுபாவத்தை மாற்றிக் கொள்ளுங்கள்" என்றாள்.

அதை ஒப்புக் கொண்ட ராமு, முதலில் சமீபத்தில் தான் பண உதவி செய்திருந்த சங்கரன் வீட்டிற்குச் சென்றான்.

அங்கு சங்கரன் கவலையுடன் உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தான். ராமுவைப் பார்த்து அவன், "நீ தந்த பணத்தில் விருந்து தயாரித்து உண்டதில், என் பிள்ளைக்கும், தந்தைக்கும் உடல் நலம் கெட்டு விட்டது. பணமெல்லாம் விருந்தில் கரைத்து விட்டோம். இப்போது மருந்துவருக்கு வேறு தண்டச் செலவு" என்றான்.

இதுபோல் இன்னும் சிலர் வீடுகளுக்குச் சென்றான்.

ஆனால், ஒருவர் கூட ராமு கொடுத்த பணத்தை உருப்படியாகப் பயன்படுத்தவில்லையென்று தெரிந்தது.



ராமு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான்.

தன் மனைவியிடம் தான் கண்டறிந்ததைப் பற்றி விளக்கிக் கூறிவிட்டு, "நீ சொன்னபடியே தான் நடந்திருக்கிறது. இனிமேலும், நான் மற்றவர்களுக்கு உதவி செய்வதையே விரும்புகிறேன்.

அது அவர்களுக்குப் பயன்படும்படி எந்த முறையில் உதவி செய்யலாம்?" என்று கேட்டான் ராமு.

அதற்கு அவள், "மனிதர்களுக்கு மிக முக்கியமானது உடல் நலம்! மருத்துவத் தொழில்மூலம் மற்றவர்களுக்குப் படி உதவி செய்யலாமே!" என்றாள்.

"மருத்துவத் தொழிலா? அதை நான் கற்றுக் கொள்ளவே பல ஆண்டுகள் பிடிக்குமே?" என்று கவலையுடன் கேட்டான் ராமு.

"வேதாரண்யத்தில் வைத்தியானந்தா என்ற யோகி இருக்கிறார். அவரிடம் கற்றுக் கொண்டால் ஒரே ஆண்டில் நீங்கள் நல்ல மருத்துவர் ஆக முடியும்" என்றாள் மனோரமா.

ராமு உடனே வேதாரண்யம் சென்று வைத்தியானந்தாவிடம் சீடனானான்.

மனோரமா கூறியதுபோல், ஒரே ஆண்டில் மருத்துவத்தை அவனுக்குக் கற்பித்த யோகி, ஆண்டு முடிவில் அவனிடம், "நீ மிகச் சிறந்த சீடனாக விளங்கினாய்.

எனக்குத் தெரிந்த அனைத்தையும் உனக்கு சொல்லிக்கொடுத்து விட்டேன்.

மந்திரங்கள் அடங்கிய ஓலைச் சுவடிகள் என்னிடம் உள்ளன. அதை இப்போது உனக்குத் தர மாட்டேன்.

நீ சுயநலநோக்கமே இல்லாமல், நேர்மையான மருத்துவனாகத் திகழ்கிறாய் என்பது நிரூபணம் ஆன பின்னரே, அதை உனக்குத் தருவேன். சென்று வா!" என்று கூறி அவர் அவனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

விஜயபுரி திரும்பிய ராமு தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் விளக்கிக் கூறினான். அதற்கு அவள் அவனை நேர்மையாக மருத்துவத் தொழிலைச் செய்யுமாறு கூறினாள். அதன்படியே, ராமு தன் மருத்துவத் தொழிலை புனிதத் தொண்டாகக் கருதி செய்யலானான். ஓராண்டிற்குப் பிறகு, ஒருநாள் ஒரு சன்னியாசி அவன் வீட்டிற்கு வந்தார்..... (தொடரும்)

## 02.2014 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1258 - பக்தாத் மங்கோலியரிடம் வீழ்ந்தது.
- 1668 - ஸ்பெயின் போர்த்துக்கலை தனிநாடாக அங்கீகரித்தது.
- 1755 - ஜாவாவின் மடாரம் பேரரசு "யோக்யகர்த்தா சுல்தானகம்" மற்றும் "சுரகர்த்தா சுல்தானகம்" என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- 1880 - எடிசன் விளைவை தோமஸ் எடிசன் அவதானித்தார்.
- 1914 - பொன்னம்பலம் அருணாசலத்திற்கு சேர் பட்டம் பக்கிங்ஹாம் அரண்மனையில் வழங்கப்பட்டது.
- 1934 - சோவியத் நீராவிக்கப்பல் செலியூஷ்கின் ஆர்க்டிக் பெருங்கடலில் மூழ்கியது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரை ஹிட்லரின் நாசிப் படைகளிடம் இருந்து மீட்டன.
- 1960 - பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டை சோதித்தது.
- 1971 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் தெற்கு வியட்நாம் லாவோசைத் தாக்கியது.
- 1974 - நோபல் பரிசு பெற்ற அலெக்சாண்டர் சொல்செனிட்சின் சோவியத் ஒன்றியத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.
- 1975 - நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தில் தீ பரவியது.
- 1984 - கான்ஸ்டன்டீன் செர்னென்கோ சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரானார்.
- 1985 - கொக்கிளாய் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அழிக்கப்பட்டது.
- 1990 - இரண்டு ஜேர்மனிகளும் இணைவது குறித்த இரண்டு-கட்டத் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- 1996 - நேபாள மக்கள் புரட்சி மாவோயிசவாத போராளிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1879 - சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை (இ. 1949)
- 1910 - வில்லியம் ஷாக்லி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ. 1989)
- 1920 அ. மருதகாசி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் (இ. 1989)

### இறப்புகள்

- 1950 - செய்குத்தம்பி பாவலர், தமிழறிஞர் (பி. 1874)
- 2009 - கிருத்திகா, தமிழக எழுத்தாளர்

### சிறப்பு நாள்

உலக வானொலி நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...பிறகு கௌண்டின்னிய முனிவர் சுந்தர மகாலிங்கர் அருளிய படியே அந்நதியில மூழ்கி சிவ பெருமானை வணங்கி, மோட்ச வாழ்வைப் பெற்றார். கௌண்டியன்னிய முனிவரின் பொருட்டு உண்டாக்கப்பட்ட தீர்த்தமாதலால், அன்று முதல் அந்த நதிக்கு கௌண்டின்னிய தீர்த்தம் என்ற பெயரும் ஏற்பட்டதாம்.

**பாவகரி நதி**


இந்தக் கௌண்டின்னிய தீர்த்தத்தில் மாளவ தேசத்து அரசன் ஒருவன் நீராடி தனது சகல பாவங்களையும் போக்கிக் கொண்டதால், இந்த நதிக்கு பாவகரி நதி என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டதாம்.

அது என்ன கதை என்கிறீர்களா? முன்னொரு காலத்தில் மாளவ தேசத்தை சோம சீதளன் என்கிற அரசன் ஆண்டு வந்தான்.

தினசரி சுவையான உணவுகளை உண்பதும் விதவிதமான ஆடைகளை அணிவதும் அழகு மிகுந்த அழகிகளை அனுபவிப்பதும் மட்டுமே வாழ்க்கை என்பதுபோல உல்லாச வாழ்க்கை வாழ்ந்துவந்தான்.

நித்தம் ஒரு புதிய சுகத்தைக் கொண்டதால், அரசாட்சியை மறந்தான். செய்ய வேண்டிய கடமைகளை மறந்தான். மக்களின் தூற்றலுக்கும் ஆளானான். ஓயாத இன்பத்தால் உடல் களைத்தது. மேனி கறுத்து தோல் வெடித்து உடல் முழுவதும் புண்ணாகி பெருவியாதியும் பற்றிக் கொண்டது.

கோடிகோடியாய் பொன்னைக் கொட்டிக்கொடுத்து பார்த்த வைத்தியங்கள் பலனளிக்கவில்லை. எத்தனை விதமான சிகிச்சைகள். பச்சிலைச்சாறு தடவியும் தைலங்கள் பூசியும், சுண்ணம், செந்தூரம், பற்பம் மருந்து, வகையறாக்கள்... ம்ஹூம்... நாளுக்கு


கௌண்டின்னிய ஆற்றைக் கடக்கும் பாதை

நாள் வியாதி அதிகமானதே தவிர குறைந்த பாடில்லை.

நோயின் கொடுமை தளாமல் கண்ணீர் வடித்த அரசன், அந்தோ! நான் செய்த தீவினைகளும் பாவங்களும் இப்படி நோயாய் வந்து என்னைத் தண்டிக்கின்றன போலும் என்று வருந்தியவனாய் இனி அரண்மனையிலேயே இருந்தால் பலன் கிடையாது. தீர்த்த யாத்திரை மேற்கொண்டால் இறைவனின் கருணையால் என் வியாதி ஒருக்கால் குணமாகலாம் என்று கருதி தீர்த்த யாத்திரை மேற்கொண்டான்.

அநேக புண்ணிய நதிகளுக்குச் சென்று புனித நீராடிய அரசன் இறுதியாக, காசி மாநகருக்குச் சென்று தெய்வத்தன்மை பொருந்திய கங்கையில் நீராடினான். அப்போது அங்கிருந்த முனிவரொருவர் அரசனைக் கவனித்து, அவனுடைய கொடுங்கோலரச ஒழுக்கத்தையும் அதனால் உண்டான ரோகத்தையும், அதனைப் போக்கிக் கொள்ள தீர்த்த யாத்திரை மேற்கொண்டிருக்கும் அவனது நிலைப் பாட்டையும் தவ வலிமையால் உணர்ந்து, "அப்பா! அரசே! நீ உன்னுடைய நோயைப்

## ஆன்மீகம் 32

போக்கிக் கொள்ள வேண்டுமானால், பெருமை நிறைந்த சதுரகிரி மலையில் கௌண்டின்னிய நதியென்ற ஒரு புண்ணிய தீர்த்தம் இருக்கிறது. அங்கே சென்று அந்தத் தீர்த்தத்தில் நீராடினால், இந்த நோய் உன்னை விட்டு உடனே நீங்குவதோடு நீ செய்த கொடிய பாவங்களெல்லாந் தீர்ந்து, உயர் பதவியாகிய மோட்ச சாம்ராஜ்யத்தையும் அடைவாய்" என்று கூறினார்.

இதனைக் கேட்ட அரசன், அம்முனிவரை சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி விடைபெற்று, சதுரகிரிக்கு வந்து, மகரிஷியின் உபதேசத்தின் படியே விரதமிருந்து, கௌண்டின்னிய தீர்த்தத்தில் நீராடி, சிறி சுந்தர லிங்க மகாலிங்கரை வணங்கி வருகையில் ஒரு வாரத்துக்குள்ளாக அவனது நோயும் பாவங்களும் நீங்கி, பிரகாசம் மிகுந்த புண்ணிய சாரீரத்தை உடையவனாக மாறி, தன்னாடு திரும்பி, மகிழ்ச்சியுடன் நீதிநெறி தவறாது, அரசு புரிந்து, வாழ்வின் முடிவில், உயர்வாகிய மோட்ச பதவியைப் பெற்றான்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்








44

"பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லையின்னு சொல்லுவாங்க. படம் ஓடட்டும். நீங்கௌல்லாம் நஷ்டப்பட்டா அதைப் பணமாகவும் தருகிறேன். இல்லே.... அடுத்த படத்தில் அட்ஜஸ்ட் செய்கிறேன். நான் சொல்லுவதைப் போல் வெற்றியடைஞ்சிட்டா உங்ககிட்டே கேட்கமாட்டேன்..." என்றார் பொன் மனச் செம்மல்.

செம்மல் சொன்னபடியே. உலகம்


எம்.ஜி.ஆர். தனது ரசிகர்மன்ற உறுப்பினருடன்

சுற்றும் வாலிபன், சுவரொட்டி இல்லாமலே மிகப் பிரமாண்டமான வெற்றியைப் பெற்றது.

உயிர் இல்லாத மனிதன் நடக்கிறான் என்று சொல்வதை விட அதிசயமாக இருக்கிறது போஸ்டர் இல்லாமல் படம் ஒடுகிறது என்பது. இது மந்திரமோ, மாயமோ இல்லை. உண்மை... இதற்கு எம்.ஜி. ஆர் அவர்களது பொப்புலாரிட்டி மட்டும் காரணம் இல்லை. அவர் படம் எடுத்தால், டைரக்ட் செய்தால் நன்றாகத்தான் இருக்கும் என்ற மக்கள் நம்பிக்கையும் அந்த நம்பிக்கைக்கு ஏற்ப சிறப்பாக படம் எடுத்திருப்பதும் தான் காரணம். "எம். ஜி. ஆர். தன்னை நம்பினோர் கெடுவதில்லை என்பதை இப்படத்தின் மூலம் நிரூபித்து விட்டார்" என்றார், திரையுலகத் தூண் நாகிரெட்டி அவர்கள்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் ரயில் போக்குவரத்து பல நிறுவனத்தினரால் நடத்தப்பட்டது. சென்னையிலிருந்து தெற்கே போகும் ரயில் எஸ்.ஐ.ஆர். நிறுவனத்தாலும், சென்னையிலிருந்த வடக்கே போகும் ரயில்கள் எம். எஸ். எம். நிறுவனத்தாலும் நடத்தப்பட்டன. சென்ட்ரல் ரயில் நிலையத்திலி ருந்து பேஸின் பிரிட்ஜ் வரை கட்டப்பட்ட சுவருக்கு- எம்.எஸ்.எம். ரயில் நிறுவனத்துக்கு சுவர் வரி விதித்தார்கள். அதனால் தான், அந்த சாலைக்கே *வோல்டாக்ஸ்* ரோடு எனப் பெயர்.

செம்மலும் சென்னை வந்து அந்த வோல்டாக்ஸ் ரோட்டில்தான் இருந்தார். இந்த வெற்றிக்கு அவர் தந்த விமர்சனம் "வோல்டாக்ஸுக்கு அதாவது வோல் போஸ்டர் டாக்ஸுக்கு போராடாமலே எம்.ஜி.ஆர். வெற்றியடைஞ்சான். நன்றி ரசிகர்களுக்கு!" என்றார்.

**அஸ்த்திபாரம் தெரிவதில்லை**

"கையைக் கட்டிக்கொண்டு நம்முடன் நிற்பவரெல்லாம் நமக்கு மரியாதை செய்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். தமது பலவீனத்தை மரியாதை என்ற பெயரில் மறைக்கிறார்கள் என்று சான்றோர் சொல்லியிருப்பதாக ஒரு டயலக் எழுதினீரே, 'காணி நிலத்தில்' நினைவிருக்கிறதா?" என்று கேட்டார் செம்மல்.

"ஆமாம் இப்ப எதுக்கு" என்று கேட்டேன்.

இவ்வளவு நாளா அது என் நெஞ்சில் இருந்திச்சு. இப்போ நேரிலே பார்க்கிறேன். போகட்டும் வாலிபன் படம் பார்த்து நீர் ஒண்ணும் சொல்லலியே" என்று கேட்டார் செம்மல்.

"சொல்ல என்ன இருக்குது?" என்றேன்.

"அப்படிச் சொல்லக்கூடாது, என்ன இல்லை... அதைச் சொல்லும்" என்று மீண்டும் கேட்டார் செம்மல்.

எனக்குச் சொல்லத் தெரியலே. எல்லாம் நிறைவா இருக்குது என்றேன். அட பைத்தியக்காரா, உம்ம பேர் அதிலே இல்லே கவனிச்சீரா" என்று கேட்க "இல்லேன்னா என்ன?" என்று கேட்டேன்.

"உமக்கு நிறைய விரோதிங்க என் ஸ்தாபனத்திலேயே இருக்கிறதை இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். போட விடலே" என்றார்.


"போனாப் போவுது ரவீந்தர்ன்னு சொன்னா உங்க மூணு எழுத்தையும் சேர்த்து இந்த ரவீந்தரான்னு கேட்கிற அளவுக்கு எனக்கு பேர் இருக்குது. அது போதும்" என்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவர் டாக்டர் ந.பரஞ்சோதி உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சாரணர்களின் அணிவகுப்பையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:–எஸ்.செல்வதீபன்)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வன்மைப் போட்டியில் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திருமதி ராதிகா மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த தென்மராட்சி வலய கல்விப் பணிமனையின் கணக்காளர் திருமதி ந.சிவமதி மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் தமிழரின் பாரம்பரிய விளையாட்டான முட்டி உடைத்தலில் பெற்றோர் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:– சாவகச்சேரி செய்தியாளர்)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி. செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவிகளின் இசை நிகழ்வுகளையும் பிரதம விருந்தினரின் பாரியார் மாணவி ஒருவருக்கு வெற்றிக்கேடயம் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:–எஸ்.செல்வதீபன்)




வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி அதிபர் திருமதி ஸ்ரீபாலராணி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் மாணவி ஒருவருக்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)



பூம்புகார் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிநடையையும் வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ்களோடு நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்துடன் உரிமை கேட்பதுதான் தமிழர்களின் பண்பு- சண்.குகவரதன்



வடக்கு தமிழ் மக்களின் ஒற்றுமையும் சாதுரியமான அரசியல் காய்நகர்த்தல்களும் ஜெனீவாவில் தமிழர்களுக்கு நியாயம் கிடைப்பதற்குக் கதவுகளைத் திறந்துவிடுவது நிச்சயமாகும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் உப பொதுச் செயலாளரும் மேல் மாகாண சபைத தேர்தல் வேட்பாளருமான சண். குகவரதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்.

வடபகுதி தமிழ் மக்கள் பல் வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வடமாகாணசபைத் தேர்தலில் ஒற்றுமையுடனும் கூட்டமைப்புக்கு அமோக வெற்றியைப் பெற்றுக்கொடுத்தனர்.

இன்று அந்த வெற்றியானது தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்ற குரலை ஜெனீவாவில் ஓங்கி ஒலிக்கச் செய்துள்ளது. அந்த ஒற்றுமை மேல்மாகாண - விசேடமாக கொழும்பு வாழ் தமிழ் மக்களிடமும் ஏற்படவேண்டும்.

மண்டியிட்டு உரிமை கேட்பது தமிழன் பண்பல்ல. வீரத்துடன் உரிமை கேட்பதுதான் தமிழனின் பண்பாகும்.

அவ்வாறு கேட்கும்போது உலகமும் எமக்கு பக்கபலத்தைக் கொடுக்கும். நாட்டின் பயங்கரமான காலகட்டங்களிலும் தமிழ் மக்களின் பாதுகாப்பு காரணமாக நாங்கள் இருந்துள்ளோம்.

அந்தப் பாதுகாப்பு அரணை மென் மேலும் பலப்படுத்தி உரிமையுடன் நெஞ்சு நிமிர்த்தி தமிழன் வாழ எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட வேண்டும். வாக்களிக்கச் செல்லாது வீடுகளில் முடங்கிக்கிடக்கும் கலாசாரத்தைத் தூக்கியெறியுங்கள். மேல் மாகாணத்தில் எம்மை வெற்றி பெறச் செய்து தமிழன் என்ற உணர்வுடன் வீறுநடை போடுங்கள் என்றார். (அ-4)

# தற்போது இலங்கையில் அனைத்தும் இராணுவமயம்


## கேணல் ஹரிகரன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தற்போது அனைத்துமே இராணுவ மயமாகி விட்டதாக கருத்து வெளியிட்டுள்ளார், இந்திய இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான கேணல் ஆர்.ஹரிகரன்.

சென்னை, அடையாறில் உள்ள இந்திய- தெற்காசிய ஆய்வு மையத்தில் நேற்று முன்தினம் மாலை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் உரை இடம்பெற்றது.

முன்னதாக, இரா.சம்பந்தனை அறிமுகப்படுத்தி கேணல் ஆர்.ஹரிகரன் உரையாற்றினார்.



இதன்போதே அவர் தற்போது இலங்கையில் அனைத்தும் இராணுவ மயமாகி விட்டதாக குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, போர்க்குற்றங்களுக்காக அனைத்துலக விசாரணை நடத்தும் நிலை வந்தாலும், அதற்கு இலங்கை அரசாங்கம் எந்தளவுக்கு ஒத்துழைக்கும் என்பது சந்தேகம் தான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-4)

# மாசிமக மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு மடத்து வாசல் சுந்தரபுரி அருள் மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மாசிமக மஹோற்சவம் நடைபெறுகின்றது.

12 நாட்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைறெும்.

12 நாட்கள் நடைபெறும் மஹோற்சவத்தை பிரதம குரு சிவஸ்ரீ வை. ஸ்ரீம சுந்தரக்குருக்கள் நடத்துகின்றார் என ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ)

# சீனப் பிரஜைகள் இருவர் கைது

காலியில் சீனப் பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி பொலிஸ் பிரிவில் டெல்பட் சுற்றுவட்டப் பகுதியில் வைத்து இவர்கள் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கை வந்துள்ள இவர்கள் குடிவரவு விதிமுறைகளை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறியே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று காலி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (அ)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஈரான் ஆதரிக்கப் போவதில்லை

**இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் அடுத்த மாதம் கொண்டு வரப்படவுள்ள மனித உரிமை மீறல் தொடர்பான தீர்மானத்தின் போது ஈரான் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்று இலங்கை வந்துள்ள ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஹஜ் விவகாரங்களுக்கான ஆன்மீகத் தலைவரின் பிரதிநிதி ஆயத்துல்லாஹ் காஸி அஸ்கர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.**

இவ்வாறு வாக்களிப்பதன் மூலம் இலங்கை- ஈரானுக்கு இடையிலான நீண்ட கால உறவுகளையும், அமெரிக்கா உட்பட ஏகாதிபத்தியத்திற்கான எதிர்ப்பையும் உலகிற்கு காண்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உலகில் மனித உரிமைகளை மீறக்கூடிய முதன்மை நாடாக அமெரிக்கா விளங்குவதாக தெரிவித்த அவர், இது தொடர்பில் எந்த நாடும் தைரியத்துடன் குரல் கொடுபபதில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

ஈரான் இஸ்லாமிய புரட்சியின் 35ஆவது ஆண்டுநிறைவைநினைவு கூரும் நிகழ்வு பஹ்மன் சமாதானம் மற்றும் ஐக்கியத்திற்கான அடையாளம் என்ற தொனிப் பொருளில் கொழும்பிலுள்ள மானுடவியல் கற்கைகளுக்கான அல் முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

மேற்படி பல்கலைக்கழகத்தின் இலங்கை கிளை தலைவர் ஸெய்யத் ஹமீதி ரிஸா ஹக்கீகி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைக்கான ஈரான் தூதுவர் டாக்டர் முஹம்மத் நபி ஹஸனிபூர், சிரியாவுக்கான முன்னாள் ஈரான் தூதுவர் டாக்டர் பாகெரி, இலங்கை முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஸமீல் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

ஆயத்துல்லா காஸி அஸ்கர் இங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் மிகவும் பழமை வாய்ந்தது. இலங்கை ஒரு பௌத்த நாடாக இருந்தாலும் ஈரான் தனது மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.


சர்வதேச மட்டத்தில் ஒற்றுமை, சமாதானம் மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காக ஈரான் செயற்படுகின்றது.

யாரும் அநியாயம் செய்யவும் அநியாயம் செய்யப்படவும் நாங்கள் ஒரு போதும் இடமளிக்க போவதில்லை.

இலங்கையின் மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கி லேயே தற்பொழுது தொடர்ச்சியாக இலங்கையின் மீது மனித உரிமைகள் மீறல் என்ற பாணியில் குற்றஞ்சாட்டப்படுகிறது.

என்றாலும், இலங்கை தனது சொந்தக் காலில் ஊன்றி எழுந்து நிற்கத் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இலங்கையின் மின்சார உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பாலங்களை கட்டும் பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு ஈரான் உதவி வருவது போன்று, இலங்கை முன்னெடுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் ஈரான் தொடர்ந்தும் தனது ஒத்துழைப்பை வழங்கும் என்றார். (அ-4)




சேட் அமைப்பானது கிளிநொச்சியில் கரைச்சி, பூநகரி பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வவுனியா மாவட்டத்திலும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெவ்) நிதியுதவியுடன் மிதிவெடி அபாயக் கல்வியை வழங்கிவருகின்றது. மிதி வெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி வழங்குவதும் மிதிவெடி செயற்பாட்டின் ஓர் அங்கமாகும். கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்டத்தில் கோணாவில் பகுதியிலும் [illegible] பயனாளிகளுக்கும் வாழ்வாதார உதவி சேட் அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளரால் வழங்கப்பட்டது.

# 14 ஆம் நாளாகத்தொடரும் ஐ.நாவுக்கான நடை பயணம்

ஐ.நா. முன்றலில் வீரத்தமிழ்மகன் முருகதாசன் திடலில் நடைபெறவிருக்கும் மாபெரும் மக்கள் போராட்டம் மகத்தானது. இப்பேரணிக்கு வலுச்சேர்க்க உலகத் தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

நாம் நிச்சயம் வெல்வோம் என தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் பெ.மணியரசன் தெரிவித்தார்.

தளராத உறுதியுடன் 14ஆம் நாளாக ஐ.நா. நோக்கி தொடரும் நீதிக்கான நடை பயணம் கடந்த மாதம் 29ஆம் திகதி நெதர்லாண்ட் நாட்டில் டென்ஹாக் நகரில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்பாக ஆரம்பமானது.

இவ் நடைபயணம் நேற்று முன்தினம் நெதர்லாண்ட் நாட்டையும் பெல்ஜியம் நாட்டையும் கடந்து வெற்றிகரமாக 14 ஆம் நாளாக 30 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து லுக்சன்பூர்க் நாட்டை சென்றடைந்தது.

மனித நேயப்பணியாளர்கள் உறுதி தளராமல் தாய்மண்ணை மனதில் நிறுத்தி நடை பயணத்தை தொடர்கின்றனர்.

பெல்ஜியம் வாழ் தமிழ் உறவுகள் லுக்சன்பூர்க் நாட்டுக்கு சென்று நடைபயணத்தை முன்னெடுக்கின்ற மனித நேயப்பணியாளர்களுக்கு தமது தார்மீக ஆதரவை வழங்கினர்.

தமிழ் மக்களுடைய செயற்பாடுகள் தமக்கு மகிழ்வையும் புதிய உற்சாகத்தையும் தருவதாக நடை பயணத்தை முன்னெடுக்கும் மனித நேயப்பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நடந்து செல்லும் பாதையில் ஈழத் தமிழர்களின் இனவழிப்பை வேற்றின மக்களுக்கு எடுத்துரைக்கும் முகமாக நான்கு மொழிகளில் துண்டுப பிரசுரம் வழங்கப்பட்டது. (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அதிர்ச்சியளித்துள்ள -இந்தியாவின் வருகை விசா, தொடர்பான முடிவு...!



சுற்றுலாத்துறை வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கில் இந்தியா, வருகை விசா திட்டத்தை 180 நாடுகளுக்கு விரிவாக்குவதற்கு கடந்த வாரம் முடிவு செய்துள்ளது.

ஆனால் இந்த 180 நாடுகளுக்குள் இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடான இலங்கை உள்ளடக்கப்படவில்லை என்பது பலருக்கும் ஆச்சரியம் அளித்திருக்கும்.

ஏனென்றால் இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் மீளவும் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்கவும் பலாலிக்கும் திருச்சி அல்லது சென்னைக்கும் இடையில் விமான சேவையைத் தொடங்கவும் இந்தியா ஆர்வம் காட்டி வருகிறது.

இதன்மூலம் இலங்கையுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்த விரும்பும் இந்தியா எதற்காக இந்த வருகை விசா திட்டத்தில் இலங்கையைப் புறக்கணிப்புச் செய்தது என்பதே பலரதும் வியப்புக்குக் காரணம்.

இதைவிட முக்கியமான விடயம் என்னவென்றால் இலங்கையுடன் சேர்த்து இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படாத ஏனைய ஏழ் நாடுகள் உள்ளன. அவற்றின் பின்னணியை உற்று நோக்கினால் இலங்கை பற்றிய இந்தியாவினது பார்வையின் பாரதூரத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

இலங்கை, பாகிஸ்தான், சூடான், ஈரான், நைஜீரியா, ஆப்கானிஸ்தான், சோமாலியா, ஈராக் ஆகியனவே இந்த நாடுகள். இதில் இந்தியா தனது பாதுகாப்புக்கு சவாலாக விளங்கும் சீனாவைக் கூட உள்ளடக்கவில்லை. ஆனால் இலங்கை உள்ளடக்கபட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பாகிஸ்தானை பரம்பரை எதிரி என்பதால் இதில் உள்ளடக்கியதாக குறிப்பிடலாம். இந்தப் பட்டியலில் உள்ள இலங்கை தவிர்ந்த மற்றெல்லா நாடுகளுக்கும் சில பொதுத்தன்மைகள் காணப்படுகின்றன.

அதில் ஒன்று இவையனைத்தும் முஸ்லிம் நாடுகள் அல்லது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகள்.

அடுத்தது இவை இஸ்லாமியத் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகள் அல்லது தீவிரவாதத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக முத்திரை குத்தப்பட்டவை.

பரம்பரை எதிரி நாடாக இந்தியாவினால் கருதப்படும் பாகிஸ்தானுக்கு வருகை விசா சலுகையை வழங்க இந்தியா மறுத்தது ஆச்சரியமான விடயமல்ல.

ஏனென்றால் இந்தியாவில் தீவிரவாதத்தை ஏற்றுமதி செய்வது பாகிஸ்தானும் அதன் உளவுப் பிரிவுமே என்று இந்தியா நெடுங்காலமாகவே குற்றம்சாட்டி வருகிறது. அடுத்து ஆப்கானிஸ்தானும் தலிபான்களின் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நாடு.

ஆப்கானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படைகள் வெளியேறிய பின்னர் தலிபான்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரைக் குறிவைக்கலாம் என்"று இந்தியா உறுதியாக நம்புகிறது.

எனவே, ஆப்கானிஸ்தானில் உள்ள அரசாங்கத்தைப் பலப்படுத்தி தலிபான்களின் கவனத்தை திருப்பவும், அங்கு ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் இந்தியா பெரும் முயற்சிகளை எடுக்கிறது.

இதற்காக கணிசமான நிதியை நெடுஞ்சாலை, ரயில் பாதை அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா செலவிட்டு வருகிறது.

முஸ்லிம் தீவிரவாதத்தை உலகிற்கு ஏற்றுமதி செய்யும் நாடாக நெடுங்காலமாக முத்திரை குத்தப்பட்டுள்ள நாடு ஈரான்.

இதனுடன் நெருங்கிய வர்த்தக இராஜதந்திர உறவை இந்தியா வைத்துக் கொண்டாலும் வருகை விசா வழங்கும் அளவுக்கு அதனுடன் கண்மூடித்தனமாக உறவு வைத்திருக்க இந்தியா தயாரில்லை. ஏனென்றால் ஈரானின் அகண்ட இஸ்லாமிய தேசக்கொள்கை இந்தியாவினது ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஆபத்தானது.

அல்கொய்தா உள்ளிட்ட முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களின் பிடியில் இருந்து விடுபடாத நாடாகவே இன்னமும் ஈராக் இருக்கிறது. அங்கு கார்குண்டுகள் வெடிகக்கப்படுவது ஒரு பொழுது போக்காகவே மாறிவிட்டது.

இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு களமாக இருக்கும் ஒரு நாடாக சூடானும் அடையாளப்படுத் தப்படடுள்ளது.

நைஜீரியா, போகோ ஹராம் என்ற அல்கொய்தாவின் கிளை தீவிரவாத அமைப்பின் செயற்பாட்டுக்குள் அமுங்கி வரும் ஒரு நாடு.

சோமாலியாவும் அல்கொயதாவின் கிளை அமைப்புக்கள் ஆதிக்கம் செலுத்திவரும் ஒரு நாடாக உள்ளது.

இந்த நாடுகளின் பட்டியலில்தான் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

ஆனால், இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மை யினராகவும் இல்லை.

வெளிப்படையான தாக்குதலகள் நடக்கும் முஸ்லிம் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்ட நாடாகவும் இது இல்லை.

இந்தளவுக்கும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நெருக்கமான அரசியல், கலாசார உறவுகளும் பூர்வீகத் தொடர்புகளும் உள்ளன.

இந்தியாவுக்கு அதிகளவு பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளில் இலங்கையர்கள் நான்காவது இடத்தில் உள்ளனர்.

2013ம் ஆண்டில் 4, 52,000 இலங்கையர்கள் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். முதலிடத்தில் 1.581 மில்லியனுடன் அமெரிக்கர்கள் உள்ளனர். அடுத்து 1.198 மில்லியன் பிரித்தானியர்களும் மூன்றாவதாக 7,40,000 பங்களாதேசியர்களும் இந்தியாவுக்கு கடந்த ஆண்டில் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இருந்தாலும் இலங்கையர்களுக்கு வருகை விசா வழங்க இந்தியா மறுத்துள்ளது. இதற்கான காரணத்தை இந்தியா வெளியிடாது போனாலும், கடந்த புதன்கிழமை புதுடில்லியில் நடந்த கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனும் புலனாய்வு அமைப்புகளின் தலைவர்களும் இலங்கைக்கு சாதகமான கருத்துகளை வெளியிடவில்லை என்றே தகவல்கள் கூறுகின்றன.

இதற்கு முக்கியமான அடிப்படைக் காரணம் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளினதும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களினதும் களமாக இலங்கை பயன்படுத்தப்படக் கூடிய நாடாக இருபபதேயாகும் இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதம் என்பது பெரியளவில் வளர்ச்சி பெறவில்லை என்ற போதிலும், அது உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உருவாகும் வாய்ப்புக்கள் குறைவே என்றாலும்', இந்தியாவுக்கு அதனால் அதிகம் தலைவலிகளை ஏற்படுத்த முடியும்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படைகள் வெளியேறிய பின்னர் காஷ்மீரில் தீவிரவாதம் தலைவிரித்தாடப் போகிறது என்பதை இந்தியா நன்றாகவே கணித்துள்ளது.

இத்தகைய நிலையில் காஷ்மீரின் மீதுள்ள இந்தியாவின் கவனத்தை திசை திருப்ப இந்தியாவின் தென்பகுதியில் தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என இந்தியா கருதுகிறது. ஏற்கனவே சில சம்பவங்களில் இஸ்லாமிய தீவிரவாத சந்தேக நபர்கள் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்தியதாதக இந்தியா கண்டறிந்துள்ளது.

குறிப்பாக லஷ்கர் இ தொய்பா என்ற அமைப்பு இலங்கையில் காலூன்றி வருவதாக அமெரிக்காவினது அறிக்கைகளும் சுட்டிக்காட்டி வருகின்றன.

இதுமட்டுமன்றி சீனா, பாகிஸ்தான் போன்ற தமக்கு வேண்டாத நாடுகளின் முகவர்கள் இலங்கை வழியாக உட்பிரவேசிக்கலாம் என்றும் இந்தியா கருதுகிறது.

குறிப்பாக இலங்கையில் சீனா மேற்கொண்டுவரும் பொருளாதார முதலீடுகள் குறித்து இந்தியா உன்னிப்பாகவே கவனித்து வருகிறது.

கடந்த வாரம் இந்திய நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் சல்மான குர்ஷித் சமர்ப்பித்த அறிக்கையொன்றில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், மியன்மார், மாலைதீவு, நேபாளம் போன்ற அண்டை நாடுகளில் சீனாவின் பொருளாதார தலையீடுகள் அதிகரித்து வருவது குறித்து இந்தியா அவதானத்துடன் இரப்பதாக குறிப்பிடடிருந்தார்.

இன்னொரு பக்கத்தில் பிராந்தியத்தில் அமைதி நிலவுவது இந்தியாவில் அமைதிக்கு முக்கியமானது என்றும் இந்தியா கருதுகிறது. கடந்த வாரம் மியூனீச்சில் நடந்த மடாநாட்டில் உரையாற்றிய இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இதனைக் குறிப்பிட்டிருச்தார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நிலவும் அமைதியின்மை இந்தியாவைப் பாதிக்கும் என்பதே அவரது கருத்தின் உட்பொருள். அந்த அடிப்படைக் கோட்பாடுதான் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்தியா உதவிக்கு நின்றதற்கும் முக்கியமான காரணம்.

விடுதலைப் புலிகளை அழித்ததன் மூலம் தனது அண்டை நாடான இலங்கையில் அமைதியை உருவாக்கிவிட்டதாக இந்தியா கருதினாலும், இலங்கையைப் பாதுகாப்பானதொரு நாடாக அதனால் கருத முடியவில்லை. அவ்வாறு கருதியிருந்தால் நிச்சயமாக இந்தியா, வருகை விசா வழங்கும் திட்டத்துக்குள் இலங்கையையும் கொண்டுவர முடிவு செய்திருக்கும்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி யுத்தத்தின் போது மக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை

## விமானப் படை தளபதி தெரிவிப்பு

யுத்தத்தின் போது இலங்கை விமானப்படையினர் பயங்கரவாதிகள் மீது மட்டுமே தாக்குதல் நடத்தியமைக்கான சாட்சியங்கள் இருப்பதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்ச அபேவிக்ரம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எவருக்கும் விமானப் படையினரின் தாக்குதல் தொடர்பாக குற்றம் சுமத்த முடியாது. தேவையானால் வேண்டிய சந்தர்ப்பத்தில் சரியான தகவல்களை முன்வைக்க தயாராக இருக்கின்றோம்.

இலங்கை விமானப்படையின் வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உட்பட வானில் மேற்கொண்ட பணிகள் தொடர்பான எழுதப்பட்ட புத்தகம் ஒன்று அடுத்த சில தினங்களில் வெளியிடப்படவுள்ளது.

பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து ஒழிக்க விமானப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான சகல தகவல்களும் அந்த புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் போது பயங்கரவாத இலக்குகள் மீது நடத்தப்பட்ட தவறின்றிய தாக்குதல்களை வெளிப்படுத்தும் தகவல்களும் இந்த புத்தகத்தில் உள்ளன.

முக்கியமாக 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் போது கண்காணிப்பு விமானங்கள், ஆளில்லா விமானங்கள் மற்றும் செய்மதிகள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் உறுதி செய்த பின்னரே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த தகவல்கள் அனைத்தும் அடங்கிய ஏரியல் ட்ப்யூட் என்ற பெயரில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புத்தகம் வெளியிடப்படவுள்ளது என்றார்.

எவ்வாறாயினும் விமானப்படைத் தளபதி இவ்வாறு கூறியிருந்த போதும், இலங்கை விமானப் படையினர் பொது இடங்கள், வைத்தியசாலைகள், மக்கள் குடியிருப்புகள் மீதும் தாக்குதல் நடத்தியதாக சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

விமானங்களில் இருந்து இரசாயன குண்டுகள் வீசப்பட்டதாகவும் விமானக் குண்டு வீச்சில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் அந்த அமைப்புகள் கூறியுள்ளன.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# தேசிய கலை இலக்கிய விழாவிற்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தேசிய கலை இலக்கிய விழாவிற்காக இவ்வருடமும் கட்டுரை, கவிதை, கையெழுத்து, பாடல் நயத்தல், பாடலாக்கம், இலக்கிய விவரணம், சிறுகதை மற்றும் சிறுவர் கதை போன்ற ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு அமைவாக தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் திறந்த போட்டியாளர்களுக்கான விண்ணப்பம் மற்றும் சுற்றுநிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆக்கங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறும் அத்துடன் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் மற்றும் மேலதிக விபரங்களைப் பெற்றுக். கொள்வதற்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (அ)

# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

மீசாலை வடக்கை சேர்ந்தவரும் தற்போது கொழும்பில் வசிப்பவருமான மயில்வாகனம் கிருபாமூர்த்தி அண்மையில் கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி ரஸ்மி சிங்கப்புலி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் காணி உபயோகத் திட்டமிடல் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் (பயிராக்கவியல்) ஆக கடமையாற்றி வருகிறார். அத்துடன் இலங்கை மண் விஞ்ஞான சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் அமெரிக்க பயிராக்கவியல் சங்கத்தின் உறுப்பினராகவும் பல நலன்புரி சங்கங்களில் பதவிநிலை உறுப்பினராகவும் இருந்து வருகிறார். (அ)

# இலங்கை பல்லி இனங்கள் கேரளாவுக்கு கடத்தப்படுகின்றன

(கொழும்பு)

இலங்கையின் இயற்கை சூழலுக்குள் மட்டுமே இருக்கும் சில வகை பல்லி இனங்கள் இந்தியாவின் மலையாள ஆயுர்வேத மருந்துகளை தயாரிப்பதற்காக கொண்டு செல்லப்படும் வர்த்தகம் ஒன்று பதுளை நகரை மையமாக கொண்டு நடைபெற்று வருவதாக தெரியவருகிறது.

பிரதேசத்தை இரண்டு வர்த்தகர்கள் மற்றும் ஒரு அரசியல்வாதி இணைந்து இந்த சட்டவிரோத வர்த்தகத்தை மேற்கொண்டு வருவதுடன் அதிகளவிலான விலைக்கு பல்லிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலை பல்லியினம், தென்னம் பல்லியினம், கரை பல்லியினம் ஆகிய பல்லியினங்களுக்கு சந்தையில் அதிகம் கேள்வி நிலவுவதுடன் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இலங்கைக்கே உரிய பல்லியினங்களின் உடலில் உள்ள ஓமோன்கள் மூலம் இந்திய ஆயுர்வேத முறையில் மருந்துகளை தயாரித்து காயங்களை குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை காரணமாக இலங்கை பல்லியினங்களுக்கு அதிகமான கேள்வி நிலவுவதாக கூறப்படுகிறது. (செ-11)

# புலிகளுக்கு உதவிய பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணை

விடுதலைப் புலிகள் சம்பந்தமான தகவல்களை மறைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் கம்பஹா உதவி பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் குரேவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படவுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி ரோஹினி வல்கம வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கான இந்த உத்தரவை பிறப்பித்தார்.

சாட்சிய வழங்குவதற்காக நீதிமன்றத்திற்கு வந்திருந்த முதல் சாட்சியாளரான பயங்கரவாத விசாரணைப் பிரிவின் சேனக்க குமாரசிங்க, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் சாட்சியமளிக்கும் திடமான உடல் நிலையில் இல்லை என அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவி, அவர்களின் உறுப்பினர்களை தாக்குதல் நடத்தும் இலக்குகள் நோக்கி பாதுகாப்பாக அழைத்து சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டு பொலிஸ் அதிகாரி லக்ஷ்மன் குரே 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

அதில் இருந்து அவர் கடந்த 5 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். (அ)



வலி. தெற்கு உடுவில் பிரதேச சபையினரால் முச்சக்கரவண்டி சங்கம் ஒன்று அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச சபை தவிசாளர் பிரகாஷ் நாடாவெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் இறுதிப்படுத்தப்பட்டது

## சர்வதேச அழுத்தமே காரணம்

சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டமூலம் பெரும்பாலும் இறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை அந்த அமைச்சு முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சு தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்த சட்டமூலத்தை முன்வைக்குமாறு அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து வந்தது.

இறுதிப்போரின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இந்த சட்டமூலம் அவசியம் என்பதன் காரணமாகவே சர்வதேச சமூகம் இலங்கைக்கு குறித்த சட்டமூலத்தின் அவசியத்தை வலியுறுத்தி வந்தது.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி இந்த சட்டமூலம் முதலில் கொண்டு வரப்பட்ட போதும் சட்டமாக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் அது தொடர்பான விவாதம் இடம்பெற்றபோதும் புதிய திருத்தங்களுக்காக அதனை நிறைவேற்றுவது பிற்போடப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் இந்த சட்டம் தொடர்பில் அழுத்தங்கள் பிரயோகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# கோத்தாவை கொல்ல முயற்சித்த ஐந்து பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பித்தளை சந்தி பகுதியில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட பாதுகாப்பு அதிகாரிகளை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தி மூன்று பேருக்கு மரணத்தை ஏற்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 5 விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ததுடன் வழக்கையும் தாக்கல் செய்தார்.


முச்சக்கரவண்டி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டை வெடிக்கச் செய்து பாதுகாப்புச் செயலாளரை கொலை செய்ய திட்டமிட்டமை, சதித்திட்டம் தீட்டியமை, அதற்கு உதவியமை, மூன்று இராணுவ அதிகாரிகளை கொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேக நபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு ஜூலை அல்லது டிசெம்பர் மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் கொல்லப்பட்ட பாலசிங்க விஜயகுமார் என்பவருடன் இணைந்து சூழ்ச்சி செய்து பயங்கரவாத செயலில் ஈடுபட்டமை, குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெறக் கூடிய தவறுகளை செய்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சட்டமா அதிபரினால் சுமத்தப்பட்டுள்ளன. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையாளபுர அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தின் பரிதாபம் பாரீரோ!

## சிறிதரன் எம்.பி.கவலை



(கிளிநொச்சி)

மலையாளபுரம் கிராமத்தின் புகழ் அடையாளமாக அன்னை சாரதாதேவி வித்தியாலயம் உள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டு தரம் 5வரையான வகுப்புகளை கொண்ட கிளிநொச்சி அன்னை சாரதாதேவி வித்தியாலயம் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த பாடசாலையை பார்க்கின்றபோது ஒருவகையில் மிகவும் பெருமையாகவும் இன்னாரு புறத் தில் கவலையாகவும் உள்ளது.

மிகவும் பொருளாதா ரத்தில் பின்தங்கி இருக்கக்கூடிய இந்த கிராமத்து மக்களின் பிள்ளைகளின் கல்வி ஆர்வமும் அதனூடான சாதனையும் மகிழ்ச்சி தருகின்றது.

இன்னொரு புறத் தில் இந்த பாடசாலை யின் மிகவும் ஏழைக் கோலம் இன்று அபிவிருத்தி பற்றி உல கத்திற்கு தம்பட்டமடிப் பவர்களின் கண்களுக்கு தெரியவில் லையே என்பதை நினைத்து மனம் வேதனை அடை கின்றேன்.

ஏ9 வீதியை ஒட்டிய ஆடம்பரமான கட்டடங்களும் வாழ்க்கையும் இந்த கிளிநொச்சி மண் ஏதோ அதி உயர்ந்த வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் மேலே சென்று விட்டதாக வருவோர் போவோருக்கு தோன்றினாலும் உள்ளே சில கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிராமக்க ளின் நிலை என்ன என்பதற்கு இந்த மலையாளபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயம் மிகச் சிறந்த உதாரணமாகும்.

ஆனாலும் தமது கிராமத்தில் ஒரு பாடசாலை தோன்றியுள்ளதே என்று மகிழ்வடைகின்றது இந்த கிராம மக்களின் மனங்கள். காரணம் தம்மை போல தமது பிள்ளைகளும் வெயிலில், மழையில் காலம் காலமாக ஓடாய்தேயும் நிலைமாறி படித்த, உயர்ந்த மேதைகளாக உருவாகவேண்டுமென அவர்கள் கனவு காண்கிறார்கள். அதற்காக இந்த பாடசாலையோடு நெருங்கி இருப்பதை உணரமுடிகின்றது.

என்னை பொறுத்தளவில் நான் இந்த மாணவர்களுக்கு உதவ தயாராக இருக்கிறேன். இவர்கள் சாதனைகள் படைக்கும் போது அவர்களை மேலும் உந்தித் தள்ளி விட நானும் எனது மாவட்ட கட்சியின் கிளையும் பிரதிநிதிகளும் உங்களுக்கு உதவ முன்நிற்போம்.

இந்த பாடசாலையின் நிலை அறியும்போது புலம்பெயர் தமிழ் மக்களும் உதவமுன்வருவார்கள் என நான் நம்புகிறேன்.

அதேபோல இங்கே வலய கல்விப் பணிப்பாளர், கோட்ட கல்விப்பணிப்பாளர் போன்றவர்களும் கலந்து கொண்டிருப்பதால் இந்த பாடசாலைக்கான வளங்கள் விரைவில் அதிகரிக்கப்பட வாய்ப்பிருப்பதாக நான் நம்புகிறேன்.

மிகச்சிறந்த மாணவ வளம் இங்கே இருப்பதால் அதை தக்க வைக்க நாம் இணைந்து பாடுபடுவோம் என குறிப்பிட்டார். (அ-4)

## கலைப் பண்பாட்டு விழா இன்று

(கிளிநொச்சி)

தைத்திங்கள் கலைப்பண்பாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5மணிக்கு உருத்தரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அ.சிவஞான சுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் **எங்கள் வாழ்வும் வளமும்** எனும் தலைப்பிலான கவியரங்கமும், யாழ்.பல்கலைக்கழக வருகை தரு விரிவுரையாளர் செல்வ மனோகரன் தலைமையில் வாழையடி வாழையாக பேணப்பட்டு வந்த தமிழர் பண்பாடு பேணப்பட்டு வருகிறதா? பேணப்படவில்லையா? என்ற தலைப்பிலான பட்டி மன்றமும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மகாதேவ ஆச்சிரம சிறுவர்களின் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து இடம் பெறவுள்ளது.

அத்தோடு பரதநாட்டியம், காவடி, வேப்பிலை நடனம், ஆதிவாசிகள் நடனம், உழவர் நடனம் என்பனவும் இடம்பெறவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-254)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு அடையாள அட்டைகள்

(குருமன்காடு)

மன்னார் மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கடமையாற்றுகின்ற 229 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகர்களுக்கும் 32 சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் அடையாள அட்டைகளும் அலுவலகப் பைகளும் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப் பட்டுள்ளன.

மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றுகின்ற சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகர்கள், சமுர்த்தி முகாமையாளர்களுக்கு இவை வழங்கப் பட்டன.

சமுர்த்தி மற்றும் திவிநெகும திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், மன்னார் நகரசபை உறுப்பினர் என்.நகுசீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 5 சமுர்த்தி வங்கிகளுக்கு பிறிண்டர் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (அ-9-250)

## முல்லையில் கருவாடு கொள்வனவு செய்தார் ஐ.நா.உதவிச்செயலர்

(குருமன்காடு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் குழுவின் ஆசிய பசுபிக் தலைவருமான ஹாவோ சூ, நேற்று முன்தினம் முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டதுடன், அங்கு சுயதொழிலில் ஈடுபட்டு வரும் கள்ளப்பாடு மீனவர்களிடமிருந்து கருவாடு கொள்வனவு செய்துள்ளார்.

அத்துடன், ஐரோப்பியன் ஒன்றியத்தினால் முல்லைத்தீவு, கரைத்துறைப்பற்று, கள்ளப்பாடு பிரதேசத்தில் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலையினையும் ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகம் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐ.நாவின் மனிதநேய இணைப்பாளரும் யு.என்.டி.பியின் வதிவிட பிரதிநிதியுமான சுபி நேந்தி, யு.என்.டி.பியின் இலங்கைக்கான பணிப்பாளர் ரஷீனா பில்கிரமி, யு.என்.டி.பியின் இலங்கைக்கான உதவிப் பணிப்பாளர் கணேஷராஜா, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பல உதவித் திட்டங்களை இலங்கை அரசினூடாக செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஐ.நா. சபையின் உதவிச் செயலாளர் மீனவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

ஐரோப்பியன் ஒன்றியத்தினால் குறித்த பிரதேசத்தில் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 5ஆயிரம் கிலோ ஐஸ் கட்டி தயாரிக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-250)

## கொக்குத்தொடுவாயில் கமநல சேவை நிலையத்தை அமைக்குக

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் கமநல சேவைகள் நிலையம் அதற்குரிய காணியில் 30 வருடகாலமாக இல்லாமையினால் அக்காணியில் குறித்த நிலையத்தை அமைத்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மேற்படி கமநல சேவைகள் நிலையத்தின் கீழ் கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகள் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில் குறித்த இடத்தில் கமநல சேவைகள் நிலையம் அமைக்கப்படாமையினால் முள்ளியவளை




பிரதேச கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பதில் கடமையை ஆற்றி வருகின்றார்.

இவ்வாறு பதில் கடமையாற்றுபவருக்கான இடம் ஒதுக்கப்படாமையினால் மரநிழலின் கீழேயே பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இக்கிராமங்களிலுள்ள 500 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் முழுமையான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

கமநல சேவை நிலையத்திற்கென கொக்குத்தொடுவாய் வடக்குப் பகுதியில் பி-297 பிரதான வீதியில் ஒரு ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே ஒதுக்கப்பட்டுள்ள காணியில் நிரந்தரமாக கமநல சேவை நிலையத்தை அமைத்து பெரும்பாக உத்தியோகத்தர், காவலாளி, இயந்திர மேற்பார்வையாளர், விற்பனை லிகிதர், குழு லிகிதர் போன்றவர்களை நியமித்து முழுமையான சேவையை வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முழுமையான சேவை தற்போது கிடைக்காமையினால் விவசாயிகளுக்கான கடன் திட்டம், பயிர்ச்செய்கை தொடர்பான ஆலோசனைகள், உதவிகள், விவசாயத்தை மேற் கொள்வதற்கான போதிய பங்களிப்பு என்பனவற்றில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இக்கிராம விவசாயிகளின் நலனை கருத்திற் கொண்டு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் குறித்த நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப் படுகின்றது. (அ-9-267)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு கரைச்சி பிரதேச சபை கேட் போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் தலைவர் வே.இறைப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வேதநாயகம் தபேந்திரன் **வாழ்வியல் விழுமியங்கள்** எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

அத்தோடு அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு இதே மண்டபத்தில் நடைபெறவுள்ள தமிழ் சங்கத்தின் செயலாண்மைக் குழுக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழ் சங்க தலைவர் கேட்டுள்ளார். (அ-9-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவகங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும்

யாழ்.குடாநாட்டில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத உணவகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்தசேகரன் அறிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து உணவகங்களிலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட இணைப் பதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

உணவகங்கள் உள்ளிட்ட வியாபார நிலையங்கள் அனைத்திற்கும் ஏற்கனவே விலைப்பட்டியல் காட்சிப் படுத்த வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. எனினும் குறித்த அறிவித்தலை உணவக உரிமையாளர்களோ அல்லது வியாபார நிலையங்களின் உரிமையாளர்களோ பின்பற்றுவதாக தெரியவில்லை.

எனவே இதுவரை விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாதவர்கள் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் காட்சிப்படுத்த வேண்டும்.

அதன்படி குறித்த திகதிக்குப்பின்னர் திடீர் சோதனை நடவடிக்கைகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் வியாபார நிலையங்கள் அனைத்திலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த வேண்டியது வியாபார நிலைய உரிமையாளர்களது கடமையாகும்.

எனவே நுகர்வோரின் நலனைக் கருத்திற்கொண்டு விலைப்பட்டியலை சரியானமுறையில் காட்சிப்படுத்த வேண்டும். மீறுவோருக்கு எதிராக எதிர் காலத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பிரிவுத்துயர் பகிர்வு



**கதிரவேலு மயில்வாகனம்**

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு மயில் வாகனம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 9 மணிக்கு Ogden Funeral Homes ,Sheppard Avenue East, Scarborough,ON , M1S 1T3 , Canada என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி இராஜலிங்கம் மகேஸ்வரி**

பிறவுண் வீதி நீராவியடியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Herning ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜலிங்கம் மகேஸ்வரி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு டென்மார்க் Herning இல் நடைபெறும்.



**திருமதி வேதாரணியம் தனலட்சுமி**

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் இருபாலை பழம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேதாரணியம் தனலட்சுமி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். யோக அரங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர்த்தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குரு பூசை மடத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோக அரங்க இயக்குநர் எஸ். உமாசுதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

யோகா வகுப்புக்கள் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை ஒரு மணி நேரம் தொடர்ந்து 30 நாட்கள் நடைபெறும். ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் தளர்வுப் பயிற்சிகள் முதன்மைப்படுத்தப்பட்டு அனுபவமுள்ள ஆசிரியர்களினால் நுட்பமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக பயிற்சிகள் பெண் ஆசிரியரினால் வழங்கப்படும். கையேடுகளும் வழங்கப்படும்.

யோகாசன செயன்முறைப் பரீட்சையில் சித்தி அடைபவர்களுக்கு சர்வதேச யோகா நிறுவனம் ஒன்றிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் அவர்களின் பெயர் விபரங்கள் நிறுவன இணைய தளத்தில் பிரசுரிக்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சியில் இணைந்து பயன்பெற முடியும். அறிமுக நிகழ்விலும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ். யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# தாய்நாட்டை நேசியுங்கள் அதற்காக தயாராகுங்கள்

## ஜனாதிபதி அழைப்பு

இம்முறை உயர்தர வகுப்பு பரீட்சை பெறுபேறுகளைக் காணும் போது வட பகுதி மாணவர்களே அதிகமாகச் சித்திபெற்றுள்ளனர். இது குறித்து பெருமை கொள்ளவேண்டும்.

பல வருடங்கள் துயரப்பட்ட அந்தப் பிள்ளைகளுக்கு இன்று சுதந்திரமாக கல்வியைப் பெற இயலுமானதே இதற்குக் காரணமாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் மதர் ஸ்ரீலங்கா வருடாந்த பரிசளிப்பு, விருது விழாவில் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார்.

அன்று வடக்கிலுள்ள குழந்தைகளுக்கு தெற்குக்குச் செல்ல வேண்டாமென பிரிவினை வாதிகள் கூறினர். அன்று தென்பகுதி பிள்ளைகளை வடக்குக்கு அனுப்ப இயலவில்லை. கிழக்கிலிருந்து மேற்குக்கு வர இயலவில்லை.

எமது பிள்ளைகளுக்கு வைராக்கியத்தை தலையில் இட்டனர். பிள்ளைகள் அச்சத்துடனேயே பாடசாலைக்குச் சென்றனர். ஒருவரை ஒருவர் விசுவாசம் இன்றிப் பார்த்த யுகம் இருந்தது.

தென்பகுதி பிள்ளைகளுக்கு தமிழ் கற்குமாறும் வடபகுதி பிள்ளைகளுக்கு சிங்களம் கற்குமாறும் கூறப்பட்ட போது அதனை இனத்துரோகமாகவே பார்த்தனர். சிலர் இதற்கு எதிர்ப்பும் தெரிவித்தனர். இன்று நிலைமை மாறிவிட்டது. அன்று எழுத்துக்களில் தார் பூசினர். வேறு மொழிகளில் இருந்த பலகைகளில், வாகனங்களில் தார் பூசினர்.

இன்று சகல பாடசாலைகளிலும் இரு மொழிகளைப் போதிக்கின்றனர். எமக்கு சிங்களம் படிக்க ஆசிரியர்களை அனுப்புமாறு நான் கிளிநொச்சிக்குச் சென்ற போது மாணவர்கள் கூறினர்.


தென்பகுதி சென்றால் தமிழ் ஆசிரியர்களை அனுப்புமாறு கூறுகின்றனர். இன்று அந்த நிலைமைக்கு நாடு மாறியுள்ளது. நாம் மொழிகளைப் பயில வேண்டும். இன்று கிராமங்களில் இருந்து திறமையான மாணவர்கள் உருவாகின்றனர்.

கல்வியில் மட்டுமின்றி மற்றைய துறைகளிலும் பிள்ளைகள் முன்னேறுகின்றனர்.

நாட்டைப் பிரிக்கும், நாட்டை அழிக்கும் தேசிய உணர்வு இல்லாத, மத உணர்வு இல்லாத, முதியோர்களை மதிக்காத, நாட்டை காட்டிக் கொடுக்கும அமைப்புக்களுக்கு பணம் வழங்காமல நாட்டுக்கு வேலை செய்யக்கூடிய அமைப்புக்களை அடையாளம் கண்டு ஐக்கியத்தைக் கட்டி எழுப்பக்கூடியவர்களை அடையாளம் காணுங்கள். அதனையே இன்று செய்ய வேண்டும்.

நீங்களே நாட்டை ஆளுகின்றீர்கள். நீங்கள் முன்மாதிரியாக அமைந்தால் நாட்டைக் கட்டி எழுப்புவது கடினமான காரியமலல. தாய்நாட்டை நேசியுங்கள். அதற்காகத் தயாராகுங்கள். இது நீங்கள் பிறந்த நாடு. நீங்கள் வாழும் நாடு. நீங்கள் இறந்த பின் நல்லடக்கம் செய்யப்படப் போகும் நாடு என்றார். (அ)

# கோட்டைக்காடு பகுதிக்கு குழாய் கிணறு அமைப்பு



(மானிப்பாய்)

மாகாண சபை உறுப்பினர் தசித்தார்ததனால் மல்லாகம் கோட்டைக்காடுபகுதி யில் குழாய், கிணறு தண்ணீர்தாங்கி மற் றும் அதற்கான குழாய் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள் ளது.

வசதியற்றோரின் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு தமது வடமாகாண சபை ஊதியத்தில் இருந்து உதவி செய்யும் திட்டத்தின் ஓர் பகுதியாக இந் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டம் மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிப சங்க பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாண சபை முதலாவது அமர்வின் போது தெரிவிக்கப்பட்ட வடமாகாண சபை உறுப்பினர்கள் தமது சம்பளத்தை வசதியற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதன் மூலமே முன்னேற்றத்தை காண முடியும் என்பதற்கு அமைவாக தனது வடமாகாண சபை சம்பளத்தில் முதலாவது நடவடிக்கையாக இவ் உதவியை சித்தார்த்தன் செய்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

# 'இயற்கை ஆடுகளம்' நடன அளிக்கைகள்

யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து வழங்கும் இயற்கை ஆடுகளம் நடன அளிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணிக்கு 286 பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளன.

நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய ஐம்பூதங்கள் பற்றி தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந் நிகழ்வுக்கான நடனங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

இயற்கை ஆடுகளம் நிகழ்வுக்கான நட்டு வாங்கத்தை நடன ஆசிரியர் களான கலா கீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன் , திருமதி பத்மினி செல் வேந்திரகுமார் மற்றும் திருமதி சுதர் சினி கரன்சன் ஆகியோர் வழங்குவர்.

குரலிசையை சங்கீத கலாவித்தகர் ம.தயாபரனும் நுண்கலை மாணி சிவராஜா சிவதர் ஷிகா ஆகியோரும் மிருதங்க இசையை இசைமணி சி.துரைராஜாவும் வயலின் இசையை கலைஞான கேசரி ஜெயராமனும் கீபோட் இசையை திருமறைக் கலாமன்ற இசைத்துறை இணைப்பாளர் இசைத் தென்றல் ம.யேசுதாசனும் வழங்குவர்.

இந் நிகழ்வை பார்வையிட ஆர்வமுள்ள அனைவரையும் வருகைதருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ)



இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிரேட் லொக்சன் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்து உரையாடிய போது... (படம்-ஈஸ்வரன்)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(முல்லைத்தீவு)


சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் மக்களுக்கிடையிலான தொடர்பு பிரிவினரால் மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி விழிப்புணர்வு கருத்தரங்கில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க ஸ்ரீவர்த்தன கலந்து கொள்ளவுள்ளார். (அ-9-267)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொழும்பு கம்பன் விழாவில் விருது பெறும் சான்றோர்கள்



கலைமாமணி பம்பாய் ஜெய ஸ்ரீ


கலாநிதி ஆறு.திருமுருகன்


பேராசிரியர் இரா. செல்வக்கணபதி


பேராசிரியர் தி.வேல்நம்பி


என்.எஸ்.வாசு


ஆர்.சிவராமன்


எஸ்.தியாகராஜா

கொழும்பு கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக் கம்பன்விழா இன்று 13 ஆம் திகதி மற்றும், 14, 15, 16 ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கையில் கம்பன்கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 34 வருடங்கள் பூர்த்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு கம்பன் விழாவின் முதல் நாளான இன்று வியாழக் கிழமை மாலை 5 மணிக்கு இராமகிருஷ்ண தோட்டம், இல. 11 இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப்படமும் சீதா இராம விக்கிரகங்களும் இலங்கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கள இசையுடனும் கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய வாத்திய இசையுடனும் மங்கையர்களின் நிறைகுட பவனியுடனும் ஊர்வலமாக விழாமண்டபம் நோக்கி எடுத்து வரப்படவுள்ளன.

இவ் ஊர்வலத்தில் நம் நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தரும் பிரமுகர்களும் இந்தியா, மலேசியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரவுள்ள அறிஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு திருக்கேதீஸ்வரர் ஆலயத் திருப்பணி அறங் காவலர் சபைத் தலைவர் வி. கயி லாசபிள்ளை தம்பதியர் மங்கல விள க்கேற்றி ஆரம்பித்து வைக்கயாழ். மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்பு கம்பன் கழகப் பெருந் தலைவருமான மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன் தலைமையில் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### *கம்பன்புகழ் விருது* பெறும் கலைமாணி பம்பாய் ஜெயஸ்ரீ

கொழும்புக் கம்பன் கழகம் உலகளாவித் தமிழ்ப்பணி செய்த சான்றோர் ஒருவருக்கு **கம்பன் புகழ் விருதினை** ஆண்டு தோறும் வழங்கி வருகின்றது.

கடந்த ஆண்டுகளில் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி கவிக்கோ அப்துல் ரகுமான், இசை அறிஞர் ரி. என். சேஷகோபாலன், நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம், பேராசிரியர் ஔவை நடராஜன் , பேராசிரியர் சிலம்பொலி சு.செல்லப்பன் ஆகியோர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

**வி.ரி.வி.பவுண்டேஷன்** நிறுவியுள்ள வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை நினைவு அறக்கட்டளை வழங்கும் **இக் கம்பன் புகழ் விருது** இவ்வாண்டு புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி கலைமாமணி பம்பாய் ஜெயஸ்ரீ அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. கடந்த ஆண்டு திருமதி. பம்பாய் ஜெயஸ்ரீ அவர்கள் ஆங்கில சினிமா ஒன்றில் பாடிய பாடல் **ஒஸ்கார்** விருதின் இறுதித் தேர்வு வரை சென்றது குறிப்பிடத்தக்கது. விருதுக் கேடயம், பொன்னாடை ரூபா ஒரு இலட்சம் பொற்கிழி ஆகியவற்றுடன் கூடிய இவ்விருதினை, கம்பன் விழாவின் நிறைவு நாளன்று மாலை கழகப்பெருந்தலைவர் நீதியரசர் கௌரவ ஜெ. விஸ்வநாதன் அவர்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

### சேவைக்காக உயர் கௌரவம் பெறும் நம்நாட்டுப் பெருமக்கள் அறுவர்.

தம் செயற்பாடுகளால் நம் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் அறுவரை ஆண்டுதோறும் கொழும்புக் கம்பன்கழகம் கௌரவித்து வருகின்றது. அவ்வரிசையில் இவ்வாண்டு கௌரவத்துக்குரியவர்களாக எஸ்.ரி.ஆர். நிறுவன அதிபர் எஸ். தியாகராஜா, புகழ்பெற்ற சிங்களக் கவிஞர் பராக்கிரம கொடிதுவக்கு, ஜாமியா நளீமியா கல்லூரி இயக்குநர் எம்.ஏ.எம். சுக்ரி, கட்டட வரைஞர் ஆர். சிவராமன், தேவி ஜுவலர்ஸ் அதிபர் என்.எஸ். வாசு, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான் நிர்வாக சபைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தத்தம் துறைசார்ந்து இப் பெரியோர்கள் நம் தேசத்திற்கும் இனத்திற்கும் தன்னலமற்று செய்த பெருந் தொண்டுக்காகவும் அவர் தம் துறை சார்ந்த ஆற்றலுக்காகவும் வழங்கப்படும் இவ்விருதுகள் ஈழத்தமிழ் மக்களால் பெரிதும் போற் றப்படுகின்றன. இவ்விருதுக்குரி யவர்களுக்கான கௌரவங்கள் விழாவின் இறுதி நாளில் சகல மரியாதைகளுடன் வழங்கப்படவுள்ளன.

### *ஆறுமுக நாவலர்* விருது பெறும் பேராசிரியர் இரா. செல்வக் கணபதி

கம்பன் விழாவில் வருடாந்தம் வழங்கவென அறக்கட்டளை விருதுகளைச் சிலர் ஏற்படுத்தியுள்ளனர். நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் என். கருணை ஆனந்தன் சிறந்த அறிஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள **நாவலர் விருது** இவ்வாண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற அறிஞரான பேராசிரியர் டாக்டர் இரா. செல்வக் கணபதி அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அண்மையில் 10 பாகங்கள் அடங்கிய புகழ்பெற்ற சைவக் கலைக் களஞ்சியத் தொகுப்பை பிரதம பதிப்பாசிரியராக இருந்து வெளிக்கொணர்ந்த பணியைப் பாராட்டும் முக மாக இவ் விருதும் ரூபா இருபத்தையாயிரம் பொற்கிழியும் அவருக்கு வழங்கப்படவுள்ளன.


கலாநிதி என்.ஏ.எம். சுக்ரி


கலைஞர் பராக்கிரம கொடித்துவக்கு

### *விபுலாநந்தர் விருது* பெறும் சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை

தமிழ்நாடு திருக்குவளை இராம ஸ்ரீனிவாசன்மங்கையர்க்கரசி நினைவு அறக்கட்டளையினர், சிறந்த இசைக் கலைஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள **விபுலாந்தர் விருது** இவ்வாண்டு புகழ்பெற்ற இசைப் பேரறிஞர் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஈழத்தின் மிக மூத்த இவ் இசைக்கலைஞரின் இசையாற்றலைப் பாராட்டி விபுலாந்தர் விருதும் ரூபா இருபதாயிரம் பொற்கிழியும் வழங்கப்படவுள்ளன.

### *மகரந்தச் சிறகுவிருது* பெரும் கவிஞர் சோலைக்கிளி

கழகத்தின் கம்பன் புகழ்விருது பெற்ற கவிஞர் **கவிக்கோ** அப்துல் ரகுமான் அவர்கள் ஈழத்துக் கவிஞர்களை கௌரவிப்பதற்காக நிறுவிய **மகரந்தச்சிறகு** விருது இவ்வாண்டு இலங்கையின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான கவிஞர் சோலைக்கிளி அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. சிறந்த கவிதை நூல்களைத்தந்து புதிய கவிநடையை உருவாக்கி வைத்த கவி ஞருக்கு மகரந்தச் சிறகு விருதும் ரூபா இருபத்தையாயிரம் பொற் கிழியும் வழங்கப்படவுள்ளன.

### *நுழைபுலம் ஆய்வு விருது* பெறும் பேராசிரியர் தி.வேல்நம்பி

புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்க ளின் நினைவாக அவரின் குடும்பத்தினர் நிறுவியுள்ள அறக்கட் டளை மூலம் சிறந்த ஆய்வு நூல் ஒன்றுக்கு **நுழை புலம் ஆய்வு விருது** வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வகையில் இவ்வாண்டுக்குரிய சிறந்த ஆய்வு நூலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர். தி.வேல்நம்பி எழுதிய **திருக்குறளும் முகாமைத்துவமும்** எனும் நூல் தெரிவு செய்யப்பட்டு நுழைபுலம் விருதும் ரூபா இருபதாயிரம் பொற்கிழியும் வழங்கப்படவுள்ளன.

### *ஏற்றமிகு இளைஞர் விருது* பெறும் சங்கீத வித்துவான் அ.ஆருரன்

தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் நிறுவியுள்ள **ஏற்றமிகு இளைஞர்** விருதினை, சிறந்த இளம் சங்கீத வித்துவான் இசை விரிவுரையாளர் அ. ஆருரன் பெற்றுக் கொள்ளவுள்ளார். இளம் வயதிலேயே பல இசை மேடைகளை அலங்கரித்து வரும் இவ்விருதாளருக்கு ரூபா பதினையாயிரம் பொற் கிழியும்விருதும்வழங்கப்படுகின்றன.

# அரசாங்கத்தை கவிழ்ப்பதே பிரிட்டனின் நோக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்க்கும் முனை ப்புக்களில் பிரித்தானியா ஈடுபட்டுள்ள தாக தேசப்பற்றுடைய பிக்குகள் முன்னணியின் உறுப்பினர் பேராசிரியர் நலீன் டி சில்வா தெரிவித்துளளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதே பிரித்தானியாவின் பிரதான இலக்காக அமைந்துள்ளது.

பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் சிறியளவிலான தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வது அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூனின் நோக்கமல்ல. மாறாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பதவி கவிழ்ப்பது மட்டுமன்றி, அவரை மின்சார நாற்காலியில்இருத்தி தண்டிப்பதே நோக்கமாகும.

இந்த தண்டனையை ஏற்றுக கொள்ளத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் குறிப்பிட்டிருந்தாகவும், அவ்வாறு ரணில் [illegible] அனுபவிக்கச் சென்றால் வெளிநாட்டுச் சக்திகள் மின்சார நாற்காலியின் மின்சாரத்தை துண்டித்துவிடும் எனவும் அவர் தெரிவித்தார். நாட்டில் எதிர்க்கட்சியோ, எதிர்க் கட்சியில் தலைவர்களோ கிடையாது. இந்த நிலைமையானது நாட்டுக்கு ஆபத்தானது.

இந்த நாட்டின் எதிர்க்கட்சியாக பிரித்தானியாவின் கன்சர்வேட்டிவ் கட்சி செயற்படுகின்றது எனவும் எதிர்க்கட்சித் தலைவராக டேவிட் கமரூன் செயற்பட்டு வருகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ)


கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்களினால் மலேரியா நோயைத் தடுக்கும் முகமாக கரணவாய் பகுதியில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றபோது....

(படம்: கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்க்கத்தின் முதற் சட்டம் எது தெரியுமா?
ஒழுங்குதான்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்கள் தறிகெட்ட தலைவிதியை எப்போது மாற்றி எழுதுவாய் இறைவா!

யுத்த அனர்த்தங்கள் எங்கள் உறவுகளின் இன்னுயிர்களை கொன்றொழித்த கொடூரம் போய் இப்போது விபத்து எனும் கொடூர தாண்டவம் எங்கள் மண்ணில் மரணத்தை மலியச் செய்கின்றன.

நாளுக்கு நாள் விபத்து மரணங்கள் அதிகரித்து வருவது கண்டு வேதனை கொள்ளாமல் இருக்க முடியாது.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் வாகனம் ஒன்று மாங்குளத்துக்கு அண்மையாக ஏ–9 வீதியில் விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே பலியாகிப்போனதும் அதில் இரண்டு சிறுவர்கள் என்ற செய்தியும் சேர்ந்து எங்கள் இதயத்தை உலரச் செய்து விடுகின்றன.

இதுபோன்று புதுக்குடியிருப்பில் தாயும் குழந்தையும் விபத்தில் பலியான சம்பவம் என, நேற்று முன்தினம் மட்டும் வாகன விபத்தில் ஏழு பேர் பலியாகிப் போகும் அளவில் வடக்கின் நிலைமை மோசமடையலாயிற்று.

வாகனம் செலுத்துபவர்களின் பொறுப்பற்ற தன்மைகளும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன்பான அரைகுறைப் பயிற்சிகளும் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் போது முறையான பரீட்சிப்புக்கு மேலாக, இலஞ்சங்கள் எழுந்து நின்று செலுத்தும் செல்வாக்குகளும் வடபுலத்தில் வாகன விபத்துக்களை மலியச் செய்துள்ளன.

இத்தகைய விபத்துக்களை தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் அதிதீவிரமாக மேற்கொள்ளப்படாவிட்டால், போர் பறித்த மனித உயிர்களை விட, இன்னும் பல மடங்கு மனித உயிர்களை நம் மண்ணில் நாளாந்தம் நடக்கும் விபத்துக்கள் காவு கொள்ளும் என்பதை இவ்விடத்தில் சொல்லித்தானாக வேண்டும்.

போர்ச் சூழல் நிலவிய காலத்தில் தொட்ட இரவுப் பயணங்கள் இப்போது தொடர்கதையாகி விட்டன. இதன் காரணமாக கொழும்பு, யாழ்ப்பாணப் பயணம் என்றால் அது இரவில் மட்டுமே நடைபெற முடியும் என்றாகி விட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு; கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் என்ற பயணம் சாதாரணமானதல்ல. குறைந்தது பத்து மணித்தியாலங்கள் பயணிக்க வேண்டிய பயணம் அது.

எனினும் ஹயஸ் வாகனங்கள் அல்லது தனிப்பட்ட வாகனங்களில் பயணத்தை மேற்கொள்ளுகின்ற போது, ஒரு சாரதி மட்டுமே தொடர்ந்து அந்த வாகனத்தைச் செலுத்துகின்றார்.

அதிலும் வடக்குத் தெற்குப் பயணம் இரவுவேளையாக இருக்கின்றபோது, இயல்பாக எவரையும் தன்னிலை மறக்கச் செய்யும் தூக்கம், விபத்து மரணங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

கொழும்பு–யாழ்ப்பாணப் பயணத்தின்போது இலஞ்சம் பெற்றுக் கொள்வதற்காக கொட்டும் பனியிலும் ரோச் வெளிச்சம் காட்டும் போக்குவரத்துப் பொலிஸார், எந்த வாகனமாயினும் அதில் இரண்டு சாரதிகள் இருக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கி இருப்பார்களா? என்றால் இல்லவே இல்லை.

ஒரு சாரதிக்கு உறக்கம் வரும்போது அங்கிருக்கக் கூடிய மற்றைய சாரதி வாகனத்தை செலுத்துவது விபத்துக்களை தவிர்ப்பதற்கு அவசியமானது.

என்ன செய்வது! இலங்கை என்றால் எந்த விடயத்திலும் இனத்துவ வேறுபாடே முந்திக் கொள்ளும் என்பதால் விபத்து மரணங்களிலும் இவர்கள் தமிழர்கள் என்ற பார்வை இருப்பது போலவே தெரிகின்றது.

எதுவாயினும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்படும் அரைகுறைப் பயிற்சிகள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் போது தலைக்கு இவ்வளவு கிடைக்கும் என்ற இலஞ்சக் கணக்குகளுக்குள் எங்கள் பூக்களையும் மொட்டுக்களையும் காய்களையும் கனிகளையும் பறி கொடுத்து விடுகின்றோம்.

இறைவா! என்ன செய்வது? எங்கள் தறிகெட்ட தலைவிதியை நீ எப்போதுதான் மாற்றி எழுதப் போகின்றாய்.

# இலங்கை மீனவர்கள் 25 பேர் புழல் சிறையில்

இந்திய கரையோர காவற்றுறையினரால் கைது செய்யப்பட்ட 25 இலங்கை மீனவர்களையும் எதிர்வரும 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு நாகப்பட்டினம் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவுக்கு அமைய 25 இலங்கை மீனவர்களும் சென்னைக்கு அருகிலுள்ள புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இவர்கள் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, இலங்கை கடற்படையினர் தம்மை கைது செய்வதற்கு எதிர்ப்பை காட்டும் வகையில் தமிழகத்தின் ஐந்து மாவட்ட மீனவர்கள் நாளை முதல் ஒரு மாதத்துக்கு தொழிலுக்கு செல்வதில்லை என்று முடிவெடுத்துள்ளனர். (அ-4)

## சட்டவிரோத பயணம்; 75 பேர் கைதாகினர்

சட்டவிரோதமான முறையில் நியூசிலாந்து செல்ல முயன்ற மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 75 பேரை பேருவளை, மொரகல்ல என்னுமிடத்தில் வைத்து நேற்று அதிகாலை 1.15 மணியளவில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஆண்கள் 60 பேரும் பெண்கள் 9 பேரும் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் மூவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் வி.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவனும் முல்லைத்தீவு பொது மருத்துவமனையின் வைத்தியர் ஏ.ரகுபதி, கல்லூரியின் பழைய மாணவியும் இணுவில் மத்திய கல்லூரியின் ஆசிரியையுமான திருமதி வதனி ரகுபதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-4)

++++++++++++++++

(யாழ்ப்பாணம்)

யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி கௌ.பரந்தாமன் தலைமையில் நடைபெறும் இவ் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராக யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் முன்னாள் அதிபர் செ.சகாதேவனும் கௌரவ விருந்தினர்களாக கல்வியங்காடு ஞான பாஸ்கரோதயா சங்கத்தின் தலைவர் சு.சுரேஸ்குமார், திருநெல்வேலி தேனு களஞ்சியத்தின் உரிமையாளர் தி.சிறி மோகன்ராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-4)

யா/வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி வி. சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, திருமதி திலகவதி செல்வராஜா சிறப்பு விருந்தினராக அவுஸ்ரேலியா படைவீரர் விவகாரங்களின் கணக்காளர் திருமதி செல்வராணி நிதி கனகரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளார். (செ-4)

++++++++++++++

யா/அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.அகிலன் தலைமையில் நடைபெறும் இவ் மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய கணக்காளர் க.பார்த்தீபனும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினரும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான வ.ஸ்ரீ கணேசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-4)

(யாழ்ப்பாணம்)

யா/அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.சிவபாலன் தலைமையில் நடைபெறுகின்ற இவ் மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குலகுமாரனும், சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர் திருமதி ஜெ.மயில்வாகனமும், யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலய அதிபர் திருமதி வா.தர்மபால சுந்தரமும், அளவெட்டி மேற்கு ஜே/220 கிராம சேவை அலுவலர் பு.பூபால சிங்கமும் கலந்து கொள்ளவுள்ளார். (அ-4)

+++++++++++++++++

(யாழ்ப்பாணம்)


சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30–க்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார். (செ-9-29)

# சத்திய தரிசனம்





இறைவனுக்கென்று வடிவம் கிடையாது. அவர் அணுவைச் விடச் சிறியவர். ஆகாயத்தை விடவும் இலேசானவர். அப்படிப்பட்டவருக்கு எவ்வாறு உன்னால் உருவத்தைத் தரமுடியும்? இவ்வுலகம் முழுவதும் அவர் நிறைந்திருக்கிறார். ஆனால் அவர் எதனோடும் தன்னைப் பந்தப்படுத்திக்கொள்ளவில்லை. பிரஹ்மன் இறைவன் உன்னுள் இருக்கிறார். நீ பிரஹ்மனுள் இருக்கிறாய். இத்தகைய ஏகாத்ம தத்துவத்திலும் கூட நாம் இரட்டை நிலையையே ஆதாரமாகக் கொண்டு நினைப்பதால் நமக்குத் தொல்லைகள்தான் மிஞ்சுகின்றன. இறைவனுக்கென்று எந்தவொரு குறிப்பிட்ட வடிவமும் இல்லையென்றாலும் எல்லா வடிவமும் அவருடையதே.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## குத்துவிளக்கில் தீபம் ஏற்றுவதன் பலன்கள்





ஒரு முகம் ஏற்றினால்– மத்திம பலன் கிடைக்கும்
இரு முகம் ஏற்றினால்– குடும்ப ஒற்றுமை பெருகும்
மூன்று முகம் ஏற்றினால்– புத்திரசுகம் தரும்
நான்கு முகம் ஏற்றினால்– பசு, பூமி, பாக்கியம் தரும்
ஐந்து முகம் ஏற்றினால்– செல்வம் பெருகும்

தீபம் எரிந்து கொண்டிருக்கும்போது விளக்கை வாயால் ஊதி அணைப்பதோ, திரியைக் கையால் நசுக்கி அணைப்பதோ கூடாது. மெல்லத் திரியைப் பின்னுக்கு இழுத்து அது எண்ணெய்க்குள் அமிழ்ந்து சமனப்படுமாறு செய்யவேண்டும். இப்படிச் செய்யுமுன் இரண்டு சொட்டுப்பாலை தீபத்தின் இருபுறமும் வைக்கவேண்டும்.

எரியும் விளக்கு, கற்பூரம், மெழுகுவர்த்தி ஆகியவற்றை வாயால் ஊதி அணைக்கக்கூடாது.

திருவிளக்கு ஏற்றும் பொழுது ஒரு தட்டில் அரிசியை நிரப்பி அதன்மேல் விளக்கினை வைத்து மஞ்சள், குங்குமம், பூ வைத்து தீபம் ஏற்றித் தீப வழிபாடு செய்தல் சிறப்பு.

நீர் நிரம்பிய பாத்திரத்தை பூஜை அறையில் வைப்பது சிறப்பு.

வீட்டில் நறுமணம் தரும் ஊதுவர்த்திகளை ஏற்றிவைத்தால் தீய எண்ணங்கள், தோஷங்கள், திருஷ்டி, காற்று கறுப்பு ஆகியவை வீட்டை நெருங்காது. இரண்டு ஊதுவர்த்தி ஏற்றிவைத்தால் அதன் ஆன்மீக சக்தி மூன்று மணி நேரம் வீட்டில் நிலவும். காலையில் விளக்கேற்றியதும் வாசல் நிலையின் மேல் சுத்தமான குங்குமத்தை (மஞ்சள் குங்குமம்) தினமும் இடுவது சிறப்பு. இதனால் வீட்டிற்குள் எந்தத் துர்தேவதைகளும் நுழையமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். சூதாட்டத்தில் டோனி, ரெய்னாவுக்கு தொடர்பு?

ஐ.பி.எல். சூதாட்டத்தில் இந்திய அணித் தலைவரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான டோனி மற்றும் ரெய்னாவுக்கும் தொடர்பு இருப்பதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக விசாரணை செய்த அறிக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 170 பக்கங்களை கொண்ட அந்த அறிக்கையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆறு பேர் தற்போது இந்திய அணிக்காக விளையாடி வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி, சுரேஷ் ரெய்னா ஆகியோருக்கும் ஆட்ட நிர்ணயம் மற்றும் சூதாட்டத்தில் தொடர்பு உண்டு என்று கைது செய்யப்பட்ட சூதாட்ட தரகரிடம் நடத்திய விசாரணை மூலம் தெரிய வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்ரம் அகர்வால் (ஹோட்டல் உரிமையாளர்), குருநாத் மெய்யப்பன் (சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கௌரவ உறுப்பினர்), கிரிக்கெட் வீரர்கள் டோனி, சுரேஷ் ரெய்னா மற்றும் இன்னும் சிலருக்கு மேட்ச் பிக்சிங்கில் என்னென்ன தொடர்பு உண்டு என்பதை தனக்கு தெரிந்த எல்லாவற்றையும் உத்தம் ஜெயின் சொல்லியிருக்கிறார்.

சென்னை-ராஜஸ்தான் அணிகள் இடையிலான ஆட்டத்தை 'பிக்சிங்' செய்வதற்கு ஒரு ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நடந்த இரவு விருந்து ஒன்றில் அகர்வால் உத்தம் ஜெயினிடம் தெரிவித்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-23)

## யாழ்.இந்துக் கல்லூரியின் வீதியோட்ட நிகழ்வு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியின் முதல் அங்கமாக இடம்பெறும் வீதியோட்ட நிகழ்வுகள் இன்று காலை 6 மணிக்கு பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகி கஸ்தூரியார் வீதி, பிறவுண் வீதி, நாச்சிமார் கோவிலடி, கே.கே. எஸ் வீதி, ஓட்டுமடம் பகுதிகளினூடாக மீண்டும் பாடசாலை மைதானத்தில் நிறைவடையவுள்ளது.

5 கிலோ மீற்றர்கள் கொண்டதாக இப போட்டி அமையவுள்ளது. இளநிலைப் பிரிவு, முதுநிலைப் பிரிவு என இரு பிரிவுகளாகப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இவ் வருடம் மரதன் ஓட்டப் போட்டிகளுக்கு வீரர்கள் மருத்துவ பரிசோதனைகளின் பின்பே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிபர் வீ.கணேசராஜா தலைமையில் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக விளையாட்டுத்துறை முதல்வர் அறிவித்துள்ளார். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இல்லமெய்வல்லுநர் போட்டிகள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் எஸ்.காண்டீபன், 682 ஆவது படைப்பிரிவின் இராணுவத் தளபதி கேணல் ரஞ்சே வனசிங்க, கௌரவ விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சேய் சோதி காந்தன், முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

(பூநகரி)

கிளி/ பூநகரி பரமன்கிராய் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி பி.இளந்திரையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-84)

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பூ.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம், சிறப்பு விருந்தினராக வித்தியா லயத்தின் முன்னாள் அதிபர் மா.மெய்யழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

(யாழ்ப்பாணம்)

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சு.கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய சுகாதாரமும் உடற்கல்வியும் ஆசிரிய ஆலோசகர் திருமதி கோ.குலபாலசிங்கம், வலிகாமம் கல்வி வலய தமிழ் ஆசிரிய போசகர் திருமதி சு.சண்முகேந்திரனும் கௌரவ விருந்தினர்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி ச.மரியாம்பிள்ளை, பாடசாலையின் பழைய மாணவனும் நில அளவையாளருமான சற்குணசிங்கம் பவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-4)

(யாழ்ப்பாணம்)

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.புஸ்பராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, ஓய்வுபெற்ற ஆசிரியர் செல்வி ச.தங்கபொன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-4)

## தலைவர் வெற்றிக் கிண்ணம்; குறிஞ்சிக் குமரன் வி.க.வெற்றி

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன. போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றன.

இடம்பெற்ற போட்டிகளில் குப்பிளான் விக்கினேஸ்வரா வி.க. அணியும் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் வி.க.அணியும் மோதின. இதில் 2:1 என்னும் கோல் கணக்கில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் வி.க.அணி வெற்றி பெற்றது.

மாதகல் சென்.தோமஸ் வி.க.அணிக்கும் துணைவி சென்.நியூஸ்ரார் அணிக்குமிடையிலான போட்டியில் மாதகல் சென் .தோமஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

இன்று இடம்பெறும் போட்டியில் 3.30 மணிக்கு அராலி கலைவாணி அணியும் விளான் அன்ரனீஸ் அணியும், 4.30மணிக்கு ஈவினை கலைமகள் அணியை எதிர்த்து அராலி சில்வெஸ்ரார் அணி மோதவுள்ளது.(க-23)



கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியின் முதல் அங்கமான வீதியோட்ட நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்ற போது...

## காமாட்சி அணியை வீழ்த்தி K.C.C.C.இறுதி போட்டிக்கு தெரிவு

வளர்மதி முன்னேற்ற கழகத்தின் 2014 ஆம் ஆண்டின் கிரிக்கெட் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இடம்பெற்ற இரண்டாவது கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் காமாட்சி அணியும் K.C.C.C. அணியும் மோதின.

இப் போட்டியில் K.C.C.C. அணி 31 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

நாணயற் சுழற்சியில் வென்ற K.C.C.C. அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.



இதன்படி சகல விக்கெட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெயரூபன் 41, சத்யன் 30, பிரதீஸன் 29, சாம்பவன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 212 என்னும் வெற்றி இலக்கோடு கொக்குவில் காமாட்சி அணி துடுப்பெடுத்தாடியது.

சுஜன், சுதர்சன் தனியே போராடிய போதும் யாரும் கைகொடுக்காமையால் 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து போட்டியில் தோல்வியைத் தழுவியது.

இதில் சுஜன் 49, சுதர்சன் 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சாம்பவன், சிலோஜன், ஜனுதாஸ் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனால் போட்டியில் 31 ஓட்டங்களால் வெற்றியீட்டி இறுதிக்குள் K.C.C.C. அணி சென்றது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை மீது திணிக்கவில்லை

## சல்மான் குர்ஷித் டில்லியில் தெரிவிப்பு

13ஆவது திருத்தத்தை இலங்கை அரசின் வேண்டுதலில்லாமல் நாங்கள் ஒருபோதும் திணிக்கவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கை ஊடகவியலாளர்களை புதுடில்லியில் நேற்று சந்தித்துரையாடும்போது தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள உயர்மட்ட ஊடகவியலாளர்கள் 20 பேர் அடங்கிய குழு, இந்திய அரசின் அழைப்பின் பேரில் புதுடில்லியை வந்தடைந்துள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் இலங்கை ஊடகவியலாளர்கள் நேற்று மாலை சந்திப்பொன்றை மேற்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**13ஆவது திருத்தச்சட்டம்**

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில இந்தியா ஆரம்பத்தில் உறுதியாக இருந்தது. இச்சட்டத்திருத்தம் என்பது ஓர் ஆரோக்கியமான ஆலோசனை தானே தவிர, இது திணிக்கப்பட்ட விடயமல்ல. அன்றைய காலத்தில் இருநாட்டு அரசாங்கமும் இணங்கியதாலேயே இச்சட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. ஆக, இணக்கமில்லாமல் அதனை நாங்கள் இலங்கை அரசிடம் திணிக்கவில்லை. நாங்கள் எதனைச் செய்தாலும் அது இருநாட்டு உறவினையும் பாதிக்காமலே செய்வோம் என்றார்.

87களில் இந்திய அமைதிகாக்கும் படையினரை இலங்கை அரசு கோரியது. நாங்கள் வழங்கினோம். மறுபடியும் அமைதி காக்கும் படையினரை திருப்பி அழைக்குமாறு பணித்தார்கள். எந்தவித மறுப்புமின்றி நாங்கள் அதனைச் செய்தோம்.

எமது இழப்புகளை காரணம் காட்டி, தீர்வொன்று காணும்வரை அமைதிகாக்கும் படை இலங்கையில்தான் இருக்குமென நாங்கள் அடம்பிடிக்கவில்லை. அவர்கள் விருப்பத்திற்கு நாங்கள் வரவேற்பளித்தோம். அதேபோல், இப்போது வீட்டுத் திட்டம் போன்றனவும் அப்படித்தான்.


ஆகையினால் 13ஆவது திருத்தச் சட்டம்பற்றி எம்மீது பழிபோடக்கூடாது. அச்சட்டமூலத்தினை ஆராய்ந்து பார்க்கும் உரிமை இலங்கை அரசுக்கு இருக்கிறது. ஆனாலும் சிலர் 13 பிளஸ் 13 மைனஸ் என்று பலவிதமாக பேசிவருகிறார்கள். நடைமுறை சாத்தியங்களுக்கு இணங்க, எந்தவொரு அரசாங்கமும் தமது சட்டமூலத்தை மாற்றியமைக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. ஆகையினால், 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இலங்கை அரசுக்கு பரிசீலிக்கும் உரிமை இருக்கிறது.

**நாடாளுமன்ற தெரிவுக்குழு**

13ஆவது திருத்தம் மற்றும் அரசியல் தீர்வுபற்றி நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆலோசித்து முடிவெடுக்கப்பட வேண்டுமென இலங்கை அரசு கூறுகிறது. இது நல்ல விடயம்தான். ஆனாலும், சிலர் அக்குழுவில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கூறிவருகிறார்கள். எம்மைப் பொறுத்தவரையில், நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து, அனைவரது ஒத்துழைப்புடனும் சிறந்த தீர்வொன்றை அடையமுனைவதே சிறந்தவழி எனத்தோன்றுகிறது.

**ஐ.நா. மனிதஉரிமை பேரவையில்**

இலங்கைக்கு எதிராக மனித உரிமை பேரவையில் கொண்டுவரவுள்ளதாகக் கூறப்படும் பிரேரணையை ஆதரிப்பதா இல்லையா என்பது பற்றி நாம் இன்னும் தீர்மானிக்கவில்லை. மனிதஉரிமை பேரவை என்பது தனியொரு நாட்டுக்குரியதல்ல. இதில் பல நாடுகள் இருக்கின்றன. ஆகையினால் அனைத்து நாடுகளின் இராஜதந்திர நகர்வுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். உயிரிழப்பு, மனிதஉரிமை மீறல்கள் என்பன சாதாரண விடயமல்ல. இதனை தாங்கிக்கொள்ளும் சக்தி எல்லோருக்கும் இருக்காது. ஆகையினால், அதற்குரிய நடைமுறைகள் இருப்பது அவசியம்தான். ஆனாலும், ஒரு நாட்டின் இறைமைக்கு பாதகம் இல்லாமல் அந்த நகர்வு இருக்க வேண்டும். இலங்கைக்குள் குழப்பம் நீடிப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பாது என்றார்.



30 வருடகால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் அந்த வரலாறு பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைப் பின்னொட்டியே போர்க்குற்ற விசாரணை பற்றியும் பேசப்படுகிறது.

பயங்கரவாதத்தினை இல்லாதொழிக்க நீண்டகாலம் எடுத்தது உண்மைதான். அதற்காக, மனித உரிமை விவகாரங்களையும் நீண்டகாலம் இழுத்தடித்து, பதிலளிக்காமல் இருக்கலாம் என நினைப்பதும் சாத்தியமாகாது. அவ்வளவு காலத்திற்கு இந்த விவகாரத்தினை இழுத்தடிக்க முடியாது. ஆகையினால், உரியகாலத்தில், அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வொன்று கண்டிப்பாக கிடைக்க வேண்டும்.

பல நாடுகளை அணுகி, தமக்கான ஆதரவினைபெற இலங்கை முயற்சிக்கலாம். அது அவர்களின் உரிமை. அதுமட்டுமல்லாமல், அனைத்து நாடுகளுடனும்நெருங்கிய உறவினை பேண முயல்வதே இலங்கை அரசுக்கு நல்வழியாக அமையும் என்றார்.

**வந்தவுடன் விசா**

இந்திய விசா நடைமுறையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பற்றி விரிவாக விவாதித்து வருகிறோம். அதில் இலங்கை வர்த்தகர்கள், பயணிகள் வந்தவுடன் விசா ( On Arrival Visa) நடைமுறை பற்றி சங்கடப்படுகிறார்கள். ஆகையினால், இதுபற்றி நாங்கள் தொடர்ந்தும் நல்ல முடிவினை வழங்க விவாதித்து வருகிறோம். சில பாதுகாப்பு சிக்கல்கள் காரணமாக, இவ்வாறான விசா நடைமுறையினை இலங்கைக்கு வழங்குவது பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும், மிக விரைவில் இந்தப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்றார். (செ-11)

# பங்களாதேஷை வீழ்த்தி இலங்கை திரில் வெற்றி



பங்களாதேஷ் அணிக்கு எதிரான பரபரப்பான முதலாவது இருபது - 20 போட்டியில் இலங்கை அணி இறுதி ஓவரில் 2 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 2 போட்டிகளைக் கொண்ட இருபது - 20 தொடரில் பங்கேற்கிறது.

இதன் முதல் இருபது - 20 போட்டி நேற்று சிட்டாஹொங்கில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை எடுத்தது.

தனது முதல் விக்கெட்டான டில்சானை (0) முதல் ஓவரின் இறுதி பந்தில் 7 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது இழந்தாலும் (மோர்டஷா) பின்னர் சுதாகரித்துக்கொண்ட இலங்கை அணி சவால் மிக்க மொத்த ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான குசல் பெரேரா 64, வேகப் பந்துவீச்சாளரான நுவான் குலசேகர 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் மோர்டஷா, ஷகீப் அல் ஹசன், சன்னி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து 169 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களின் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

மூன்றாம் இலக்க துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அனாமுல் ஹக் சிறப்பாக துடுப்பெடுத்தாடி பங்களாதேஷை வெற்றியிலக்கை நோக்கி பயணிக்க வைத்தார்.

இறுதி ஓவரில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரில் அனாமுல் ஹக் 3 பவுண்டரிகள் அடித்தபோதிலும் இறுதிபந்தில் அவரின் ஆட்டமிழப்பு பங்களாதேஷின் வெற்றியை கலைத்தது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக அனாமுல் ஹக் 58, ஆரம்ப வீரர் தமீம் இக்பால் 30 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக திஸார பெரேரா, குலசேகர ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக இலங்கை அணியின் குசல் பெரேரா தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2-வதும் இறுதியுமான இருபது - 20 போட்டி இதே மைதானத்தில் நாளை ஆரம்பமாகிறது. (க)

## ஐ.பி.எல். ஏலம்

7வது ஐபிஎல் வீரர்களுக்கான ஏலம் பெங்களூரில் தற்போது நடைபெற்று வருகிறது.

பல நாடுகளைச் சேர்ந்த 514 வீரர்களை ஏலத்தில் எடுக்க 8 அணிகள் போட்டியிடுகின்றன.

மொத்தம் ரூ.275 கோடிக்கு வீரர்களை ஐ.பி.எல். அணிகள் ஏலம் எடுக்கின்றன. ஏலம் எடுக்கப்பட்ட வீரர்கள் விவரம் வருமாறு:

7வது ஐ.பி.எல். தொடருக்கான முதல் வீரராக முரளி விஜய்யை டெல்லி அணி 5 கோடிக்கு தேர்வு செய்துள்ளது.

மேலும் டெல்லிக்கான அடுத்த வீரராக கெவின் பீட்டர்சன் 9 கோடிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். கெவின் பீட்டர்சனை ஏலம் எடுக்க அனைத்து அணிகளுமே போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.


அதிகபட்சமாக யுவராஜ்சிங்கை பெங்களூர் அணி 14 கோடிக்கு தேர்வு செய்துள்ளது. இலங்கை வீரர் ஜெயவர்த னேவை எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜாக்கஸ் காலீஸ் கொல்கத்தா அணியில் 5.5 கோடிக்கு ஏலம் போனார். இந்தியாவின் அதிரடி ஆட்டக்காரான வீரேந்திர சேவாக்கை 3.2 கோடிக்கு பஞ்சாப் அணி ஏலத்தில் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் அதிரடி ஆட்டக்காரான டேவிட் வோர்னரை முதல் வீரராக சன் ரைசர்ஸ் அணி 5.5 கோடிக்கு ஏலம் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் ஜோர்ஜ் பெய்லியை பஞ்சாப் அணி 3.25 கோடிக்கு தேர்வு செய்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அணித்தலைவரும், ஆல் ரவுண்டருமான டரன் சமியை 3.50 கோடிக்கு சன் ரைசர்ஸ அணி தேர்வு செய்துள்ளது. தென் ஆப்ரிக்காவின் டுபிளஸ் சிஸ்ஸை சென்னை அணி 4.75 கோடிக்கு ஏலத்தில் எடுத்துள்ளது.

தமிழக வீரரான தினேஷ் கார்த்திக்கை 12.5 கோடிக்கு டெல்லி அணி ஏலத்தில் எடுத்துள்ளது. நியூசிலாந்தின் பிரண்டன் மெக்கலம் 3.25 கோடிக்கு சென்னை அணி ஏலத்தில் எடுத்துள்ளது.



அவுஸ்திரேலியாவின் மைக் ஹஸியை 5 கோடிக்கு மும்பை அணி தேர்வு செய்துள்ளது.

இந்தியாவின் அமித் மிஸ்ராவை 4.75 கோடிக்கு சன் ரைசர்ஸ் அணி தேர்வு செய்துள்ளது.

இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளரான ஷசாகீர் கானை 2.6 கோடிக்கு மும்பை இந்தியன்ஸ் அணி தேர்வு செய்துள்ளது.

இந்தியாவின் புஜாரா 1.9 கோடிக்கு பஞ்சாப் அணியில் இடம்பிடித்தார்.

தென் ஆப்ரிக்காவின் டுமினி 2.2 கோடிக்கு டெல்லி அணியில் தேர்வு செய்யப்பட்டார். இந்தியாவின் ரொபின் உத்தப்பா 5 கோடிக்கு கொல்கத்தா அணியில் தேர்வு செய்யப்பட்டார்.

அவுஸ்திரேலியா அணியின் பிராட் ஹாட்ஜ் 2.4 கோடிக்கு ரீஜஸ்தான் அணியில் தேர்வு செய்யப்பட்டார். அவுஸ்திரேலியா அணியின் ஷோன் மார்ஷ் 2.2 கோடிக்கு பஞ்சாப் அணியில் தேர்வு செய்யப்பட்டார்.

இந்தியாவின் மனோஜ் திவாரி 2.8 கோடிக்கு டெல்லி அணியில் இடம்பிடித்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான டுவேன் ஸ்மித்தை 4.5 கோடிக்கு சென்னை அணி தேர்வு செய்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து பொலிஸார்...

பில்மேலும்தெரியவருவதாவது.

மோட்டார் சைக்கிளில் குற்ற எச்சரிக்கை ஒலியை ஏற்படுத்திய போக்குவரத்துப் பொலிஸார் மேற்படி நபரை பின்தொடர்ந்து துரத்தியுள்ளனர்.

இதனால் பிரஸ்தாப நபர் யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் இருந்து நாவலர் வீதியூடாக ஆனைப்பந்தி சந்திக்கு வேகமாக மோட்டார் சைக்கிளினை ஆர்முடுக்கி செலுத்தி சென்றுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பருத்தித்துறை வீதியூடாக பயணித்த ஆட்டோ குறுக்கிட வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டியுடன் விபத்துக்குள்ளாகி பின் மின் கம்பத்தில் மோதுண்டுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயங்களிற்கு இலக்கானார். உடனடியாக பிரஸ்தாப நபர். மாலை 3.55 மணியளவில் யாழ்.போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலன் இன்றி நேற்று மாலை 6.20 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி விபத்தில் மோட்டார் சைக்கிள் ஆட்டோவுடன மோதுண்டதில் ஆட்டோ தடம் புரண்டதையடுத்து அதில் பிரயாணம் செய்த கொடிகாமம் மீசாலையை சேர்ந்த எஸ.மனோன்மணி (வயது 74) பி.மதிவதனி (வயது 48) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிசசை பெற்று வருகின்றனர். சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (செ-4-6-11)



# மேலும் இரண்டு

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி 22 ஆவது தட வையாக நேற்று புதன்கிழமை தோண்டப்பட்ட போது மேலும் 2 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ன தலைமையில் நேற்று புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் மதியம் 1 மணிவரை குறித்த மனித புதைகுழி தோண்டப்பட்டது. இதன் போதே 2 மனித எலும்புக்கூடுகள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களின் தொகை 61 ஆக அதிகரித்துள்ளது. (செ-11)

# சட்டத்திற்கு புறம்பாக...

இருக்கின்றேன். ஆனால் சட்டத்திற்கு புறம்பாக நான் எதனையும் குறிப்பிடவில்லையென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யாழ். வரணி மகா வித்தியாலய நிகழ்வில் முதலமைச்சர் உரையாற்றும்போது, உலகில்சர்வாதிகாரிகளாக வாழ்ந் தவர்களுக்கு இறுதியாக என்ன நடந்தது என்பதனை உணர்ந்துகொள்ள வேண்டும்என கூறியிருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக முதலமைச்சரை விசாரணைகுட்படுத்த ஜனாதிபதி விசாரணை நடத்த தீர்மானித் திருப்பதாக வெளியான செய்தி தொடர பாக நேற்றைய தினம் ஊடக வியலாளர்களினால் கேட்ட போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களும் எனக்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். ஆனால் நான் இலங்கையின் சட்டத்திற்கு முரணாக பேசியிருந்தால் அதற்காக என் மீது நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன் என முதலமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய மாகாணத் திலுள்ள பிரச்சினைகளிலும் பார்க்க வடமாகாணமே அதிகளவான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. சமூகத்தில் கலாசார சீரழிவுகளும் மிதமிஞ்சிக் காணப்படுகின்றது. எனவே இவ்வாறான பிரச்சினைக்கும் தீர்வு எட்டப்பட வேண்டும் எனவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# ஜெனிவா நீதியை...

சௌந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த யாழ். ஆயர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் பின்னரான தற்போதையநிலைமைகளை அறிந்த கொள்ளும் வகையிலையே நோர்வே தூதுவரின் சந்திப்பு அமைந்திருந்தது. அத்தோடு தற்போதைய மாகாண சபை மற்றும் மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் என்பன தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்தனர்.

இதன் போது வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளது? இதன் செயற்பாடுகள் மக்களுக்குத் திருப்தியானதாக அமைகின்றதா? உள்ளிட்ட பல கேள்விகளை மாகாண சபை தொடர்பாக கேட்டிருந்தனர்.

அதாவது இங்கு அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே முறுகல் நிலைதான் இருக்கின்றது. மேலும் தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்பட்டு வருவதால் மக்களுக்கான பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாத நிலை இருக்கின்றது.

இவ்வாறு அரசாங்கம் முரண்படும் வகையில் செயற்படுவதால் கூட்டமைப்பினரும் மாகாண சபையினூடாக அரசிற்கு கோபமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனைத்தான் அரசாங்கம் விரும்புகின்றது.

இந்நிலையில் இன்று காலை (நேற்று) வடக்கு முதலமைச்சரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

இதன்போது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்கும் பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதே வேளை வெளிநாடுகளும் இதற்கு உதவ வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருக்கின்றார். இதே கருத்தினை முன்வைத்து நோர்வேயும் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு உதவ வேண்டுமென நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இதேவேளையில் இங்குள்ளமக்கள்தற்பொழுதெதனை விரும்புகின்றனர் என்றும் எதிர்பார்ப்புக்கள் என்ன என்றும் வினவியிருந்தனர். இவ்வாறு நம்பு வதாலோ அல்லது எதிர்பார்ப்பதாலோ என்ன பயன் என்றும கேள்வியெழுப்பிருந்தனர் இதற்கு நான் பதிலளிக் கையில் இங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் விசாரிக்கப்பட வேண்டும். இத்தகைய விசாரணைகள் இலங்கையில் மட்டுமல்ல அதற்கு வெளியிலும் விசாரிககப்பட வேண்டுமென்றே விரும்புகின்றனர். இதனாலேயே ஜெனிவாவை அதிகம் எதிர்பார்த்திருக்கின்றனர் ஏன்று சுட்டிக்காட்டியிருந்தேன்.

இங்கு மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது. அத்தோடு இங்கு காணாமல் போனவர்களின் நிலைமை மிகவும் கவலையளிப்பதாக இருக்கின்றது. இவ்வாறு காணாமல் போனவர்கள் மற்றும் இங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலைக் கொண்டுவரும்வகையிலையே ஜெனிவாவை எதிர்பார்த்துள்ளதாகவும் இதன் மூலமாகவே நீதியும் நியாயமும் கிடைப்பதுடன் மனத் திருப்தியும் ஏற்படுமென்றும் எடுத்துக் கூறினேன்.

இதேவேளையில் இங்கு போர் முடிவடைநது ஐந்து வருடங்கள் ஆகவுள்ள நிலையில் யாழில்இளைஞர்கள்மத்தியில் போதைப் பொருள் பாவனை மற்றும்போதைக்குடிவகைகள் மற்றும் பாலியல் பலாத்காரங்கள் என்பன அதிகரித்து வருகின்றது. போரினால் ஏற்பட்ட காயங்களே இது வெளச்சுட்டிக காட்டியுள்ளதுடன் இதனால் இங்குள்ள பெரியவர்கள் பலரும் கவலையடைந்திருப் பதாகவும் நோர்வேத் தூதுவரிடம் எடுத்துகூறியதாக யாழ். ஆயர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# ஜனாதிபதி...

றும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட 200 முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும சில நாடுகளின் தலைவரகளை சந்தித்து இலங்கை நிலைமைகளை விளக்குவார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், இலங்கை ஜனாதிபதியின் பிரிட்டன் விஜயத்திற்கு எதிர்ப்பும் வெளியிடப்பட்டு வருகின்றது.

ஜனாதி பதி பிரிட்டனுக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக மியன்மாருக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் 3-ம் திகதி ஜனாதிபதி மியன்மாருக்கு விஜயம் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

# ஜெனிவா பிரேரணை...

களை சந்தித்து பிரேரணை தொடர்பான பிந்திய தகவல்களை பெற்றுள்ளனர்.

போர்க்குற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எவ்வித முன்னேற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

எனவே பிரித்தானிய அரசாங்கம், சர்வதேச நட்பாளர்களுடன் இணைந்து சர்வதேச விசாரணை ஒன்றுக்கான நடவடிக்கைகளை எடுப்பதாக தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி குழு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இதுவே இலங்கைக்கு எதிராக செயற்பட வேண்டிய தருணம் என்று பிரித்தானியா நினைப்பதாகவும் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி குழு குறிப்பிட்டுள்ளது. (செ-11)

# அரசு தரும் பணத்தை...

பாது காப்பு வலயங்கள் என்ற பெயரில் இராணுவ முகாம்களை அமைத்து வருகின்றது.

இன்று எம் தமிழ் மக்கள் வாழ்வதும் எமது நிலங்களை மீண்டும் பெற்று வாழ்க்கை நடத்தலாம் என்ற நம்பிக்கையிலேயே. இவ்விடயத்தில் அரசாங்கம் மீண்டும் தவறிழைத்துவிடக்கூடாது.

எமது தமிழ் மக்களின் நிலங்கள் அரசாங்கம் எமக்கு கொடுக்கும் பணத்தை விடவும் பெறுமதியானது. தமிழ் மக்களின் வாழ்வாதாரமும் அவர்களின் எதிர்காலமும் அவர்களின் நிலங்களை நம்பியே உள்ளது. அவற்றிற்கு விலைபேசி தமிழர்களின் வயிற்றில் அடித்து விடக் கூடாது.

மேலும் இன்றைய காலகட்டத்தில் நிலத்தின் பெறுமதியானது மிக உயரிய மட்டத்தில் உள்ளது. இந் நிலையில் அரசாங்கம் குறிப்பிட்டுள்ள 20 ஆயிரத்து 11 ஏக்கர் நிலப்பரப்பும், அதில் உள்ள சொத்துக்கள் மட்டும் விவசாய பயிர்களும் ஒட்டுமொத்தமாக அரசாங்கம் மதிக்கும் தொகையினைவிடவும் உயரவானதே. இதை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்குமென்பது சாத்தியமற்றவிடயமே.

அரசாங்கம் சுயநலமாக செயற்படுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் வாக்குறுதிகள் எப்போதும் பொய்யானதாகவே அமைகின்றது.

தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி தமது காரியங்களை அரசாங்கம் செயற்படுத்திக் கொள்ளக்கூடாது.

வடக்கு வாழ் தமிழ் மக்களின் நிலங்களையும் எம் மக்களிடமே ஒப்படைத்து வடக்கை பாதுகாக்க முன்வர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)


## இலங்கையின் விசா ஆலோசனை வரலாற்றில் மிகப் பெரும் திருப்புமுனை

முதன் முறையாக :-

கனடாவில் படிக்க உழைக்க 5 வருட விசா

நம்பமுடியாவிட்டால். வென்றுவந்த விசாவை அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதித்துவிட்டு மன நிறைவோடு எம்மோடு இணைந்து கொள்ளலாம்.

இவ்வாய்ப்பு சில மனிதருக்கு, சொற்ப காலம் மட்டுமே நீடித்திருக்கும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

www.thisaivisa.com

(C-6493)





## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு விற்பனையாகிறது

## கணித விவேக வழிகாட்டி

ஆக்கம்: I.L.M.ஸபான் (அக்கரைப்பற்று)

ஒழுங்குபடுத்தப்பட்ட தெளிவான பாடங்களுடன் இலகுவான வசனநடையில் தொகுக்கப்பட்ட புலமைப்பரீட்சை வினாக்களையொத்த தொகுப்பு வினாக்களுடன், விடைகள் அடங்கியது.

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
V.P.P. ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்

விலை: 450/-

32, சென். அந்தனீஸ் மாவத்தை, கொழும்பு 13. தொ.பே : 077 6258778

(C-6482)






## VACANCY In NELLIYADY

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தர தொழில். சர்வதேச முன்னணி நிறுவனத்தின் New Office 4 இற்கு 18 வயதுக்கு மேற்பட்ட O/L தோற்றிய 30 பேர் வீதம் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு :- பயிற்சி, தங்குமிட வசதிகள் இலவசம்
பயிற்சியின் போது 12,000/- பின் 35,000 /- +

அழைக்கவும் :- 077 621 9536, 077 512 7011

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ணா

0777 590 792

(C-6490)

## திருமணத் தேவைக்கான கார் வாடகைக்கு விடப்படும்





இல.44 சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :
021 222 8984
077 615 2992
077 374 7825


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org